# மெய்யியல் நோக்கு

PHILOSOPHICAL JOURNAL

## உலகின் தலைவிதி!?



உலகப்போக்கின்
நிர்ணய உரிமை
வலியவன் கரத்தில்...
உயர முடியா
எளியவர் அனேகர்
மிதிபடும் நிலையில்

உலகின் தலைவிதி!?

உண்மையை அறிந்துணர

விழி: 03 பார்வை: 02 பங்குனி, 2003

# மெய்யியல் நோக்கு

## A PHILOSOPHICAL JOURNAL

(வருடம் இருமுறை)

(Bi - annual)

விழி: 03 பார்வை: 02 பங்குனி: 2003

Publishers:
Faculty of Philosophy
Xavier's Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

வெளியீடு:
மெய்யியல்துறை
சவேரியார் குருத்தவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

"உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு
Academic Year } 2002 - 2003

பருவம்
Semester } 02

பங்குனி - ஆடி

2003

# உள்ளடக்கம்


பக்கம்

1) **அமெரிக்காவின் ஈராக் மீதான போரை நியாயப்படுத்தலாமா?** - 08
(கிளவுஸ் பொ:ஃன் கிளவுஸ்விற்ஸின் மெய்யியல் பின்னணியில் போர்பற்றிய ஆய்வு)
சா. பி. கிருபானந்தன், M. M. R. Sc. (Leuven)
The present war of America on Iraq
**S. F. Kirupananthan,** M. M. R. Sc. (Leuven)

2) **பிளேற்ரோ, அரிஸ்ரோட்டில் கண்ணோக்கில் உளவியல்** - 17
யே. அ. அருள்தாசன், B. Ph. (Rome)
Psychology according to Plato and Aristotle
**J. A. Arulthasan, B. Ph. (Rome)**

3) **சத்தியாக்கிரகம்** (Satyagraha): **காந்திய கண்நோக்கு** - 24
சூ. டக்ளஸ் மில்ரன் லோகு, B. A. (Phil) (Madurai)
Satyagraha: A Gandhian Perspective
**S. Douglas Milton Logu,** B. A. (Phil) (Madurai)

4) **சுயஉயர்வெய்தல்** (Self-transcendence) **ஞானத்துயிலின் அடித்தளம்** - 32
பற்றிக் ஞானப்பிரகாசம், அ.ம.தி., B. Th. (Rome)
Self-transcendence – the base of mystical experience
**Patrick Gnanapragasam,** OMI, B. Th. (Rome)

5) **விடுதலை கொடுக்கும் "முறையான சிந்தனை"** - 37
எஸ். யூ ஜெகான், அ.ம.தி., B. Ph. (Rome)
The Right - Mindfulness That Gives Freedom
**S. U. Jehan,** OMI, B. Ph. (Rome)

தொகுப்பாசிரியரிடமிருந்து...

# போரும்!..நோயும்!

சம கால உலகில் என்ன நடக்கிறது? சதாம் - சார்ஸ் என்ற இரு பெயர்கள் சமகாலமக்களாலும் தொடர்புக்கருவிகளாலும் அதிகம் பாவிக்கப்படுகின்ற வார்த்தைகளாக இருக்கின்றன. சதாமைத்தேடி அமெரிக்காவினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தலைப்பட்சமான போர் உலகின் கவனத்தை சில நாட்கள் ஈர்த்து வைத்திருந்தது. இப்போது உலகின் கவனம் எல்லா இடங்களிலும் பரவிவரும் உயிர்க்கொல்லி நோயான சார்ஸ் பக்கம் திரும்பியிருக்கிறது.

சதாம் பயங்கர ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்று குற்றஞ் சாட்டி, சதாமையும், அவரது பயங்கர ஆயுதங்களையும் தேடி ஆரம்பித்த அமெரிக்காவின் ஒரு தலைப்பட்சமான போர் இதுவரை தனது இலக்கை எட்டவில்லை. இதுவரை சதாம் அகப்படவில்லை. அவரது பயங்கரமான ஆயுதங்களும் கைக்கெட்டவில்லை. ஆனால் இதுவரை பல மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டு ஆயிரக்கணக் கான அப்பாவி ஈராக்கியர்கள் பலியாக்கப்பட்டுள்ளார்கள். பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஈராக்கின் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. பணத்தின் பெறுமதியில் அளவிடமுடியாத பண்டைய நாகரீகத்தின் ஆவணங்கள், நுண்கலைப்பொருட்கள் இப்போரினால் அழியுண்டு போயின. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த மத்திய கிழக்கின் மொசெப்பெத்தேமிய நாகரீகத்தின் வரலாற்று ஆவணங்களும் யூப்பிரட்டீஸ் நதிக்கரைகளில் வளர்ந்த உலகின் தொன்மையான நாகரீகத்தின் சான்றுகளும் அவர்களின் உயர்ந்த கலாச்சாரத்தின் அடையாளங்களும் நாசமாக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கெல்லாம் ஒருதலைப்பட்சமாக போரை ஆரம்பித்த கூட்டுப்படைகள் பொறுப்பேற்குமா? பொறுப்பேற்றாலும் இழந்தவைகளை மீட்க முடியுமா?

சீனாவில் ஆரம்பித்த சார்ஸ் இன்று உலக நாடுகளையெல்லாம் அச்சுறுத்துகின்ற உயிர்க்கொல்லியாக மாறிவிட்டது. சீனாவில் இந்நோயின் தொடக்க காலங்களிலே இந்நோயின் கொடூரத்தையும் தீவிரத்தன்மையையும் மருத்துவர்கள் கண்டறிந்தனர். ஆனால் இந்நோயின் தீவிரத்தன்மையும் தொற்றும் வேகமும் வெளிப்படுமானால் தம் நாட்டின் சுற்றுலாத்துறையும் வியாபாரமும் பாதிப்படையும் என்றுணர்ந்த சீன அதிகாரிகள் இந்நோய் பற்றி உலகிற்கு அறிவிக்காது மறைத்தனர். இதனாலேயே பல முன்னேற்பாடுகள் எடுக்காது போனதனால் பல அப்பாவிமக்கள் உலகெங்கும் இந் நோயினால் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு சமகால உலகை தற்போது கலக்கிக் கொண்டிருக்கும் போரும் நோயும் மனிதரது சுயநலத்தின் அடையாளங்களாக உள்ளன.

மனிதனை சிந்திக்கும் விலங்கு என்றும் சமூக விலங்கு என்றும் அரசியல் விலங்கு என்றும் பல மெய்யியலாளர்கள் வரைவிலக்கணப் படுத்தினர். மாக்கியவெல்லி தோமஸ் கொப்ஸ் போன்ற மறுமலர்ச்சிக்கால அரசியலறிஞர்கள் மனிதரது போர்க்குணம் அதிகாரவெறி போன்றவற்றை ஆராய்ந்து மனிதன் ஒரு சுயநலப் பிராணி என்று விளங்கப்படுத்தினர். ஆனால் இச்சுயநலம் ஆதி மனிதனுக்குரிய ஆரம்பகாலப் பண்பு என்றும் நாகரீகமடைந்த மனிதன் யாரெனில் அரசியல் என்கிற பண்பினால் இச் சுயநலத்தை பிரதீயீடு செய்தவனே என்றும் முன்வைத்தனர். எனவே அவர்கள் அரசியலை ஒரு பண்பாக, மனிதனது இயல்பான சுயநலத்தைப் பிரதியீடு செய்கின்ற ஒரு உயர்ந்த நிலையாக் நோக்கினர்.

வரலாறு என்பது ஒரு சுற்றுவட்டம் என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டால் சமகால உலகின் போக்கு எமக்கு எதை உணர்த்துகிறது? நாம் எமது அடிப்படையான இயல்பான சுயநலத்திற்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறோமா? சமகால உலகின் அரசியல் நிலையும் அமைப்புக்களும் சுயநலம் நிறைந்தவைகளாகத் தோன்றவில்லையா? சமகால உலகின் போரும் நோயும் கொடூரமான மனிதச் சுயநலத்தின் அடையாளங்களாக எமக்குத் தோன்றவில்லையா?

இந்த அழிவுமிக்க சூழ்நிலையிலிருந்து மனிதன் எவ்வாறு தன்னை விடுவித்துக் கொண்டு முழுமையான மனிதனை, மனிதத்துவத்தை நோக்கி நடைபோட முடியும்? ஜேர்மன் யூத அறிஞரான மாட்டின் பியூபரும் பிரெஞ்சு அறிஞரான கபிரியேல் மாசலும் மனிதனை முழு மனிதத்துவத்தை நோக்கி நகர்த்துவதற்கு பல அரிய சிந்தனைகளை முன்வைத்துள்ளனர். நான் - நீ என்ற உறவு நிலையமைப்பும், தன்னையறிதலும், அனைத்து - அகவுணர்வும் முழு மனிதத்துவத்திற்கான படிக்கற்கள் என்பது இவர்களது கருத்தாகும். இன்றைய சமகால உலகிற்குத் தேவையானது நான் - நீ - நாங்கள் என்ற வலைப்பின்னலில் அமைந்த உறவு அமைப்பும், மாசல் கூறும் "நான் என்பது நாங்கள் என்பவைகளின் மகவு" என்ற ஆழ்ந்த உணர்வுமேயாகும்.

**From the Editor ...**

# War on Iraq!...SARS!

What is happening in the contemporary world? Sadam and SARS are the two names which are mostly used by the people and media. Some days back American war on Iraq in search of Sadam was the centre of attention for the people and now it is diverted towards SARS.

America waged a war on Iraq in search of Sadam and his deadly weapons. But this target is not yet achieved. Instead thousands of innocent people of Iraq are killed. Government and private properties and resources worth many billion dollars have been destroyed. Many museums and archeological spots which were the testimonies of the great ancient civilizations of the Middle East which flourished thousands of years ago in Mesopotamian sector and Euphrates river bank are destroyed and looted overnight.

China acknowledges that it was aware of SARS from its onset but did not warn the world of it, thinking that it would affect its tourism and business. Now it has spread to many countries and the innocent people who were unaware of this deadly syndrome are killed.

War on Iraq and SARS can be viewed as contemporary signs of human selfishness.

Philosophers defined human nature as rational, social, political etc. They also identified his religious and cultural nature. Machiavelli and Thomas Hobbes, the renaissance philosophers analyzed human nature and brought out the view of human being as a selfish being. But they said that this selfishness of man was only a sign of his primitive nature. The civilized human beings have acquired the political nature which is a substitute to its primitive quality, that is, selfishness.

If we accept the view that history repeats, then, what does the situation of the world signal to us? Are we returning to our primitive nature? Are the wars and deadly diseases appearing to us as signs of cruel human selfishness?

How can man liberate himself from this decadent situation and journey towards real humanism? As Martin Buber and Gabriel Marcel thought, self-realization, inter-subjectivity and the awareness of the I - Thou relationship would lead the contemporary man towards real humanism. As Marcel observes, 'I is the daughter of We.'

## 'சார்ஸ்' பற்றி உள்ளூர் நாளேட்டிலிருந்து...

# 'எயிட்ஸ்' போன்று உலகை அச்சுறுத்தும் இன்னொரு ஆட்கொல்லி நோயாக 'சார்ஸ்'

அமெரிக்க - ஈராக் போரை விட உலகெங்கிலும் இப்போது கலக்கத்தை ஏற்படுத்தி வரும் விஷயம் எதுவாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

சற்றும் யோசிக்காமல் 'சார்ஸ்' என்று நீங்கள் சொன்னால், உங்களைத் துல்லியமாக இன்றைய நிலையில் வைத்திருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

'Severe Acute Respiratory Syndrome'என்பதன் சுருக்கமே 'SARS' 'சார்ஸ்'. ஏயிட்ஸ் போலவே இதுவும் ஒரு உயிர்கொல்லி நோய்தான்.

30 ஆண்டுகளுக்கு முன் முதல்முறையாக கண்டறியப்பட்ட போது உலகம் முழுவதும் எயிட்ஸ் எத்தகைய பீதியைக் கிளப்பியதோ அதே போல இன்று உலகை அச்சுறுத்தும் இன்னொரு கொடிய நோயாக உருவெடுத்து வருகிறது 'சார்ஸ்'.

சீனாவின் தென்மாநிலமான குவாங்டாங்கை தான் சார்ஸ் முதலில் தாக்கியது. இது என்ன நோயாக இருக்கும் என்று மருத்துவர்களுக்கே பிடிபடாத புதிராக இருந்தபோது அடுத்தடுத்துப் பலர் உயிரிழந்தார்கள். சீன அரசு கொஞ்சம் தாமதமாக விழித்துக்கொண்டது. பிறகு மும்முரமாகச் செயற்பட்ட சீனமருத்துவ நிபுணர்கள் ஒருவழியாக பெப்ரவரி மாத மத்தியில் நோய் மேலும் பரவாமல் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தார்கள்.

ஆனால், சார்ஸ் வேகமாகப் பரவக்கூடிய தொற்று நோயாயிற்றே. சீனாவிலிருந்து ஹொங்கொங்கிற்கு அங்கிருந்து வியட்நாம், சிங்கப்பூர் பின் கனடா ....கடைசியாக அவுஸ்ரேலியா வரை இந்நோய் வேகமாகப் பரவிவிட்டது. அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி போன்ற வளமையும் வாழ்க்கைத்தரம் மிகுந்த நாடுகளும் இந்நோயின் பிடியிலிருந்து தப்பமுடியவில்லை. இந்நாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடிக்கிவிட்டிருக்கின்றன.

நன்றி: ஞாயிறு யாழ். தினக்குரல் 13 ஏப்ரல் 2003, பக்.14.

**உனது பார்வைகளில் விசாலமும், உனது பிரச்சினைகளில் தெளிவும், மற்றவர் பால் பொறுமையும், எத்தகைய நிலையிலும் துணிவும் தருவதுதான் கல்வி**

**- லாமூர்**

## ‘சார்ஸ்’ பீடிப்பு குறித்து பல வாரங்களாக காத்து வந்த மௌனத்தை கலைத்தது சீனா

பீஜிங்கில் சார்ஸ் தொற்றுகை தொடர்பாக பல வாரங்கள் மௌனமாக இருந்த சீன அரச ஊடகம் தற்போது சார்ஸ் குறித்த பூரண விபரங்களை வழங்கி வருவதுடன், பதவியிலிருந்து நீக்கப்பட்ட சீன சுகாதார அமைச்சர் மற்றும் பீஜிங் மேயர் ஆகியோரை அவர்களது கவனயீனம் குறித்து கடுமையாக விமர்சித்துள்ளது.

தற்போது திடீரென சார்ஸ் நோயாளிகளது எண்ணிக்கையை அதிகரித்து சீனா வெளியிட்டு வருவது முன்னர் உண்மையான விபரங்களை அது மறைத்ததை நிருபிப்பதாக அமைந்துள்ளது.

சார்ஸ் குறித்த விபரங்களை மறைக்கும் முயற்சிகள் நடைபெறக்கூடாது என்பதற்காகவும், சார்ஸை கட்டுப்படுத்துவதில் சீனா முனைப்பாக இருக்கிறது என்று உலகிற்குத் தெரிவிக்கும் முகமாகவும் சீனா தனது சுகாதார அமைச்சரையும், பீஜிங் மேயரையும் பதவி நீக்கியது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ‘சார்ஸ்’ ஆசிய பொருளாதாரத்திற்கு 1000 கோடி டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தும்

சார்ஸ் பரவுகை 2003 ஆம் ஆண்டில் ஆசிய பொருளாதாரத்தில் 10.6 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பினை ஏற்படுத்தும் என மதிப்பிட்டு அமெரிக்க வோல் ஸ்றீற் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பீட்டின் படி இந்த இழப்பு 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹொங்கொங், சிங்கப்பூர், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சுற்றுலாத்துறை சார்ந்த பொருளாதாரமே சார்ஸ் பரவுகையின் பெரும் பாதிப்பிற்கு இலக்காகியுள்ளது. சார்ஸ் காரணமாக தாய்லாந்து சுற்றுலாத்துறைக்கு இவ்வருடம் 6 சதவீத நிகர தேசிய உற்பத்தி அதாவது 1.2 – 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படும் என்று தாய்லாந்து வர்த்தக சம்மேளனம் கணிப்பிட்டுள்ளது.

நன்றி: செவ்வாய் யாழ். தினக்குரல் 22 ஏப்ரல் 2003, பக்.3.

**திருப்திதான் சந்தோஷத்தின் வேர். அதிருப்திதான் தொல்லைக்குப் பிறப்பிடம்.**

**- மனுநீதி**

# அமெரிக்காவின் ஈராக் மீதான போரை நியாயப்படுத்தலாமா?

(கிளவுஸ் பொஃன் கிளவுஸ்விற்ஸின் மெய்யியல் பின்னணியில் போர்பற்றிய ஆய்வு)

**- சா. பி. கிருபானந்தன்**

அமெரிக்க - ஈராக் போர் எதிர்பார்த்ததுதான். புதுவருடத்து வான விளையாட்டுகள் போல தொலைக்காட்சித்திரையில் தொலைக் காட்சி ஊடகங்கள் இப்போரை அமர்க்களமாகக் காட்டுகின்றன. அமெரிக்காவின் சூளுரையையும், இராணுவ யுத்த தளபாடங்களையும், வீரபிரதாபச் செயல்களையும் திரும்ப திரும்ப ஒளி பரபப்புகின்றன. தள நிலைமைகளையும் ஈராக்கிய மக்களின் அவலங்களையும், அழிவுகளையும் மறைத்தும் இடைக்கிடையில் மனிதாபிமான செய்திகளையும் கலந்தும் வெற்றி என ஊடகங்கள் திரும்ப திரும்ப முழக்கமிடுகின்றன. தொடர்பு ஊடகங்களின் ஏகாதிபத்தியம் தமது இருப்பை நியாயப்படுத்துகின்றன. பெரும்பாலும் போர் செய்தியென நாம் பார்ப்பது இவ்வூடகங்களின் பார்வையையே.

**தொடர்பு ஊடகங்களின் ஏகாதிபத்தியம்**

ரம்போ 1, ரம்போ 2 தொடர்ச்சி மாதிரி செலேயிட் (சினிமா) அமெரிக்க கனவுலக போர்தான் இதுவும். அமெரிக்க கற்பனாவாதக் கலவை எனலாம். அதிகமான கணினி விளையாட்டுகள் யுத்த தந்திரத்தை மையமாக கொண்டதையும் எதிரிகளை வெல்லும் யுக்தியையும் மேலாதிக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். துப்பாக்கி பாவனை நியாயப்படுத்தப்பட்டும் போர் மனப்பான்மையும் துப்பாக்கி கலாச்சாரமும் அவர்களின் அரசியல் பொருளியல் போக்கில் ஊட்டி வளர்க்கப்பட்டுள்ளன. போர்பற்றிய எமது பார்வை பெரும்பாலும் சி.என்.என்., ஸ்கை, பி.பி.சி. தொலைத் தொடர்பு ஊடகங்கள், வானொலிகள், செய்திப்பத்திரிகைகள், இணைய பக்கங்கள் போன்றன தமது ஏகாதிபத்திய கருத்துக்களை நியாயப்படுத்தும் நோக்கோடு தரும் தகவல்களாலேயே நெறிப்படுத்தப்படுகின்றன. சைபர் வெளி நியாயங்களுக்கிடையில் அறநெறியை பேணும் தளக்கருத்துக்களை தேடல் எமக்கு தேவை.

உலகளாவிய ரீதியிலான பலத்த வெகுஜன கருத்துகளுக்கு எதிராகவும் ஐ. நா. சபையின் கருத்தையும் காற்றில் பறக்கவிட்டு, அமெரிக்க கூட்டுப்படைகள் பெருமெடுப்பில் நகரத் தொடங்கி ஈராக் நகரங்களைக் கைப்பற்றி விட்டன. கூட்டுப்படைகள் என்றாலும் ஆங்கிலோ சக்ஸன் கலவைதான். திருத்தந்தை 2ம் யுவான் பாவிலுவின் சமாதான தூதும் தூக்கியெறிப்பட்டது. முடிவற்ற நீதி என சூளுரைத்து ஆரம்பித்தது பின்னர் மாற்றம் கண்டதுடன் ஆப்கானிஸ்தான் யுத்தத்தின்

தொடர்ச்சியா? அல்லது மூத்தவர் புஸ்ஸின் பாலைவனப் புயலின் இரண்டாவது அத்தியாயமா என்பதே எமது தற்போதைய கேள்வி.

**கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸின் "போர்முறை"**

கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸ் ( Claus von Clausewiz - பிறப்பு: 1780) போர் பற்றிய மெய்யியல்ரீதியான நீண்டதொரு ஆய்வை தனது நூலான 'போர்முறை' (On War: 1816- 1830) எனும் நூலில் போர்பற்றிய அறிவுரீதியான ஆய்வினை முன்வைத்தார். கிளவுஸ்விற்ஸ் (On War) 'போர்முறை' பற்றிய நூலை 'போர்பற்றிய விவிலியம்' (Bible of Warfare) என்பர். பனிப் போர் காலத்தில் ஐக்கிய அமெரிக்கா சோவியத் இரசியா ஆகிய இரு நாடுகளின் அணுகுமுறையில் கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸின் தாக்கம் இருந்ததை அனைவரும் உணருவர். 1915ல் கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸ் கண்ணோட்டத்தில் மார்க்ஸியம் பற்றிய விளடிமீர் லெனினின் வாசிப்பு அக்டோபர் புரட்சியின் யுக்தியை உருவாக்க வழிவகுத்தது. கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸின் தாக்கம் மாஓ, சேகுவராவின் செயற்பாடுகளில் பெருமளவில் காணப்பட்டது. அவர்கள் பெருமளவில் மேற்கோள் காட்டுவதில் அவற்றை அவதானிக்கலாம். மேற்கத்தைய நாடுகளில் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது லுண்டர்வ் கொர்மான் கான், பின்னர் பனிப்போர் யுக்தியாளர்களான பேர்னாட விலடி, கென்றி கிசிங்கர், ரொபேட் ஒஸ்கொட் கிளவுஸ் பொ.·.ன் கிளவுஸ்விற்ஸை எடுத்தாள்வதைக் கணலாம்.

**கிளவுஸ்விற்ஸின் வாழ்க்கை**

அவரது அரசதோற்றத்தின் பின்னணிபற்றிய சந்தேகம், ஒரு இராணுவ ஜெனரலாக இருந்தபோதிலும் போரில் வெற்றியடையாத நிலை ஆகிய இரு பிரச்சினைகளும் கிளவுஸ்விற்ஸின் வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை உருவாக்கியது. பிரஞ்சுப் புரட்சியில் மக்கள் கூட்டத்தை தமது நோக்குக்காக போராட எழுச்சியுறச் செய்ததையே அவர் மிகவும் முக்கியமானதாகக் கருதினார். இவ்வகையான மக்கள் எழுச்சியை நெப்போலியன் தனது இராணுவ யுக்தியாக பாவித்ததுடன் இம்மக்களின் எழுச்சியை தனது அரசியலின் வரையறையாகப் பயன்படுத்தியதையும் அவதானிக்கலாம். இவ்வகையான அனுபவம் பெரும் தாக்கத்தை கிளவுஸ்விற்ஸில் ஏற்படுத்தியது. பிரான்ஸ் - பிரசிய யுத்தத்தின்பின் கிளவுஸ்விற்ஸ் பிரசிய இராணுவக் கழகத்தின் தலைவராக இருந்தார். போர் பற்றிய அவரது கடினமான நூல் உருவாக 1816-1830 நீண்ட காலம் எடுத்தது.

### கிளவுஸ்விற்ஸின் போர் பற்றிய கண்ணோட்டம் அறிவுரீதியானது

"போர் எப்பொழுதும் வன்முறையானதும் எதிர்பார்ப்புக்களு மற்றதுமாகும். இருப்பினும் போர் அறிவுரீதியற்ற ஒன்றல்ல: எனவே விளங்கிக் கொள்ளக்கூடியது" என்னும் வேறுபாடான சிந்தனையை அவர் தனது ஆய்வில் முன்வைத்தார். அதாவது போர் கட்டுப்படுத்தப்படக்கூடிய தன்மை உள்ளது. போர் யுக்தி அரசியல் அறிவுரீதியான தன்மைக்கு கட்டுப்பட்டது என்று கிளவுஸ்விற்ஸ் முன்வைக்கும் கோட்பாடு அணு யுகத்தில் மிகவும் அவசியமானது. அறிவியல் போக்கில் தங்கியிருக்காவிட்டால் எதில் தங்கியிருக்கமுடியும். போர் அறிவுரீதியானது என்றால் போர் அறம் பற்றிய கருத்தோட்டம் பெருமளவில் உள்ளதும் அறிவுரீதியானதே. அறிவற்ற செயற்பாட்டினை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டாலும் அறிவுள்ள சிந்தனை ஓரளவுக்கு தாக்கத்தை உருவாக்கும். கிளவுஸ் பொ.்.ன் கிளவுஸ்விற்ஸ்சும் இன்னும் அவரது சிந்தனையை பின்பற்றுவோரும் போரில் அறிவுரீதியான தன்மை இருப்பதால் ஒரு வகையான அறவியல் சிந்தனைக்கு இடமுள்ளது என்பர்.

### ரோல்ஸ்ரோயின் (Tolstoy) தலைவிதிக்கண்ணோட்டம் (Fatalistic View)

ரோல்ஸ்ரோய் போரும் சமாதானமும் என்னும் நூலில் குறிப்பிட்டவாறு போர் ஒரு ஊக்கியே. எனவே அது மனித நியாயமான அறிவுக்கு அப்பாற்பட்டது. இது உணர்வுரீதியான தலைவிதிக் கண்ணோட்டம். ஆனால் பரவலான நிலைப்பாடு மனித யதார்த்தத்துக்கு வெளியே போர் இயல்பாக நிகழ்வதால் அதை நாம் கட்டுப்படுத்தமுடியாது என்பதாகும். இவ்வகையான தலைவிதிக் கண்ணோட்டத்தால் (Fatalistic View) போர்முறைபற்றி நியாயமான பதிலாக்கத்தின் விவாதம் இல்லாமல் போய்விடும்.

### முழுமையயான போர் (Absolute War)

கிளவுஸ் பொ.்.ன் கிளவுஸ்விற்ஸ் போரை முழுமையான (வெறும் சிந்தனாவாத) (Abstract) போர், யதார்த்தமான போர் (Real War) என இரண்டு விதமாக அணுகுகிறார். கிளவுஸ் பொ.்.ன் கிளவுஸ்விற்ஸ் மெய்யியல்ரீதியான ஆய்வில் முழுமையயான போர் காலம், இடம் என்னும் குறிப்பிட்ட இருப்பு அற்ற வெறும் சிந்தனாவாத (Abstract) நிலைப்பாடாகும். இவ்வகையான போரை நிர்வாண யுத்தம் (Naked War) என்பதோடு இது முழுமையான போர் என்றும் இதனால் எதிரியை எமது சித்தத்துக்கு பணிய செய்தலையே இறுதி முடிவாகக் கொண்ட வன்செயலின் செயற்பாடு என்றும் வர்ணிக்கிறார். இதற்கு சிறந்த உதாரணம் இருவருக்கிடையிலான வாட் போர், அல்லது துப்பாக்கிச் சமர். இதன் இறுதி முடிவு வெல்லுதல் அல்லது தோற்றல் என்ற பூச்சியம் - ஒன்று என்ற கணக்கு விளையாட்டாகும். முழுமையான

போரை எப்படி காட்டினும் அல்லது அதை உயர்த்திப் பிடிப்பினும் அது வெறும் வன்செயலே ஆகும். எதிரியை இல்லாது செய்யுமட்டும் வன்முறையை அதிகரிக்கும் மனப்பான்மை இவ்வகைப் போரில் நடைமுறையில் உள்ளது. நான் என் எதிரியை அழிக்காவிட்டால் எதிரி என்னை அழித்துவிடுவான் என்னும் விவாதம் முன்வைக்கப்படும். வளைகுடாப் போரில் சதாம் குசையின் அழிக்கப்படுவதுதான் நோக்கம் என மூத்த புஸ் வர்ணித்ததை கவனத்தில் கொள்ளல் வேண்டும். இவ்வகை நிலைப்பாடு ஒருவர் அழியுமட்டும் சமூக அரசியல் வன்செயல் தொடரும் நிலையை யதார்த்தமாக்கும்.

மெய்யியல் ரீதியில் கிளவுஸ் பொ·ன் கிளவுஸ்விற்ஸ் இவ்வகையான போர் முழுமையான வன்செயல் என விவரித்தார். யதார்த்தமான போர் இவ்வகை நிலைப்பாட்டை மெய்மைப்படுத்துமானால் வன்செயலின் சுற்றுவட்டம் (Spiral of Violence) யதார்த்தப்படுத்தப்படுவதுடன் போர் அதிகரிக்கும் பண்பு அமையும். இல்லாவிட்டால் அரசியல்ரீதியில் கட்டுப்பாடு இல்லாமல் போகும்.

## யதார்த்தமான (Real) போர்

யதார்த்தமான போர் எப்பொழுதும் அதிதீவிர நோக்கையும் முடிவையும் கொண்டிருக்கும். முடிவு அதன் போக்கை அடையும் முறையை நியாயப்படுத்தும். கத்தோலிக்க அறவியலில் முடிவு (End will not justify means)அதனை அடையும்முறையை நியாயப்படுத்தாது. யதார்த்தமான போர் என்பது மற்றைய நோக்கான அரசியலின் நீட்சியேயாகும். கிளவுஸ் பொ·ன் கிளவுஸ்விற்ஸ் கருத்துப்படி அரசியல் என்பது தூய அரசியல் அறிவியலேயாகும். அதாவது ஆள்தன்மையுடைய தேசத்தின் அறிவு என்பதாகும். யதார்த்தமான போர் கோட்பாடு அரசியல் பொறுப்புணர்வு, வெகுஜன உயர்வு, இராணுவ தளபாட வளம் ஆகிய மூவகை அம்சத்தின் உரையாடலிலும் சமநிலையிலும் தங்கியுள்ளது.

## அரசியல்ரீதியான அறிவுத்தன்மை

நாட்டின் அரசியல்வாதிகளின் ஆய்வுக் கண்ணோட்டமே போரின் நோக்கம், யுக்தியை தீர்மானிக்கின்றது. இதனை வெகுஜனங்களின் உணர்விலிருந்து பிரித்தறிதல் முடியாது. போரில் அரசியல்ரீதியான ஆய்வுக்கண்ணோட்டம் இல்லாதுவிட்டால் அது அர்த்தமற்றது. அரசியல்ரீதியான அறிவுத்தன்மை மூன்று அம்சங்களை கொண்டது.

- அரசியல் இலக்குகள் - எமது இறுதி நோக்கம் என்ன?
- யுக்தி - இதை அடையும் முறை எது?
- செயற்பாடு - எப்படி இவ்யுக்தியை தளத்தில் பிரயோகிப்பது?

போரில் இராணுவ செயற்பாட்டுக்கும் அரசியல்ரீதியில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கும் சமமானரீதியில் தொடர்பியல் அமையவேண்டும். இதன் பின்னணியில் போர்முறையை இராணுவ யுக்தி என்னும் கருத்துத்தளத்தில் மட்டும் ஆய்வு செய்வது அர்த்தமற்றது. எனவே அரசியல்வாதிகள் போரின் நோக்கத்தை மிகவும் துல்லியமானமுறையில் அரசியல் இலக்கை வைத்து ஆய்வுசெய்தால் அதுவே அர்த்தமான இராணுவ நடவடிக்கையை செயற்படுத்தி இராணுவ யுக்தியாக மாற்றும். இராணுவத்தின் செயற்பாடு இவ்வகை யுக்தியை செயற்படுத்துவதோடு இவ்வகைமுறையை அர்த்தமுள்ளதாக்குவதாகும். அரசியல் போர்முறையை நெறிப்படுத்துவதால் உள்நாட்டு வெளிநாட்டு அரசியலுக்கிடையில் சமத்துவம் பேணப்படவேண்டும்.

**உள்நாட்டு அரசியல்**

தேசத்தின் உள்நாட்டு அரசியலில் ஒரு சில குழுக்களின் நோக்கங்களையோ அதிகார குழுமங்களின் (இராணுவ - அரசியல் கட்சிகள்) விருப்புகளையோ எடுத்தாளாமல் முழு மக்களினதும் அபிலாசைகள் விருப்புக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதாவது உண்மையாகவே மனிதத்துவமானதா?, பொது நன்மைக்குரியதா?, தேசத்தின் நலனுக்குரியதா? என்பதை அறிய தத்துவஞானிகளின் கருத்தை கேட்குதல் வேண்டும். உதாரணத்திற்கு பொது மக்கள் ஆயுதமயமாக்கப்படவேண்டுமா? என்பதைபற்றிய கருத்தை அறியலாம்.

கேகலியன் (Hegel) கருத்துப்படி தேசம் அதன் எதிர்வாதத்தை குறிக்கின்றது. அதாவது ஒரு தேசமானது தன்னை சுற்றியுள்ள மற்ற தேசங்களினால் தன் அடையாளத்தை பெறுகின்றது. (பெல்ஜியம் தன்னை சுற்றியுள்ள பிரான்ஸ், யேர்மனி, கொலண்ட் அகிய நாடுகளிலிருந்து தன் அடையாளத்தை வலியுறுத்துவதனால் தனி தேசம் என்னும் வரையறையை அடைகிறது). வெளிநாட்டு அரசியலுக்கு இந்த வரையறை தேவை.

**வெளிநாட்டு அரசியல்**

எல்லா தேசங்களும் ஒருவித சமத்துவத்தை பேணி தமது இருப்பை உறுதிப்படுத்துகின்றன. ஒரு தேசம் தனது போக்கில் செயற்படுமானால் அது சமத்துவத்தை இல்லாமற் செய்துவிடும். இவ்வகையான செயற்பாடு சுற்றியுள்ள நாடுகளை அதற்கெதிராக கிளம்பி அதிகாரத்தைப் பெறும் நடவடிக்கையை உருவாக்கும்.

**வெகுஜன உணர்வு**

மக்கள் குழுவின் குருட்டுத்தனமான உணர்ச்சி போரின் போக்கை மாற்றிவிடும். சரியான முறையில் வரையறுத்த அரசியல் திட்டத்தை தகர்த்துவிடலாம் அல்லது தாக்கத்தை உருவாக்கலாம்.

போரின் அடிப்படை நோக்கம் ஆழமும் எல்லையுமாகும். எனவே போர் மக்களின் வாழ்க்கையைத் தொடுமானால் யதார்த்தமான போரும் முழுமையான (Abstract) போராக மாறும். நோக்கம் பலமற்றதானால் வன்முறை குறைவாயும் பேச்சுவார்த்தைக்கான அரசியல் காரணிகள் பலமாயும் அமையும். அரசியலின் அறிவுரீதியான ஆய்வின் தரம் அறிவற்ற தன்மையுடைய வெகுஜன உணர்ச்சியை சரியாகப் புரிந்துகொள்ளலேயாகும். இதை அரசியல் யுக்தியை திட்டமிடுவோர் கவனத்தில் கொள்ளாவிட்டால் அழிவு தவிர்க்கமுடியாது. (எல்லா விடுதலை போராட்டங்களின் வெற்றியை நிர்ணயிப்பது மக்கள் உணர்வே).

வழக்கமாக அறிவுத்தனமற்ற வெகுஜன உணர்ச்சியின் துல்லியமான மதிப்பீடு யுக்தியை நிர்ணயிக்கும். சில தருணங்களில் சிறந்த அரசியல்வாதி மக்களின் உணர்ச்சியை தக்கவைக்க மதிப்பீட்டோடு திசை திருப்புவார் எனலாம். இரண்டாம் உலக யுத்த காலங்களில் பிரிட்டன் மக்களின் அபிமானத்தை பெற்ற சேர்ச்சில் சமாதான காலத்தில் பெறவில்லை.

## இராணுவ தளபாடங்களின் வளங்கள்

இராணுவ தளபாடங்களின் வளங்கள் என்னும்போது எண்ணிக்கையையோ அல்லது சிறப்பான அம்சங்களை மட்டும் குறிப்பிடவில்லை. இராணுவ தளபாடங்களின் போக்குகளும் நோக்கங்களும் இராணுவத்தின் சுய ஆளுமையும் கருத்தில் கொள்ளவேண்டும். போர்வீரனுக்கு வயிறு உண்டு. மற்றும் நித்திரை களைப்பு ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். நெப்போலியன் குறிப்பிட்டதுபோல் ஒவ்வொரு இராணுவவீரனும் வயிற்றினால் அணியாய் நடக்கிறான். (every soldier marches on his belly) அவனது பெருமை, ஊக்கம், தலைமைத்துவத்துக்கான பற்றுறுதி, நம்பிக்கை, மதிப்பு ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். இதில் வெகுஜனங்களின் சுய பெருமையும் அடங்கும். போர்பற்றிய உணர்ச்சி மக்கள் மத்தியில் உயர்வாகக் காணப்படுமானால், யுத்தத்தின் போக்கையும் இராணுவ வெற்றியையும் தொடர்பியல்மட்டத்தில் அமைத்தல் வேண்டும். மக்களின் உணர்வு உயர்வாக காணப்பட்டால் அவர்களை ஆயுதமயமாக்கல் சில நன்மைகளை உருவாக்கும். பிரஞ்சுப் புரட்சியின் வெற்றிக்கு இதுவே காரணமாய் அமைந்தது. இம்மூன்று அம்சங்களும் ஒன்றுக்கொன்று கூட்டுறவைக் கொண்டிருந்தால் முழுமையான போருக்கு வழிவகுக்கும்.

## எதிரி சாத்தான்கள்

எதிரியை சாத்தான்களாக பார்க்கும் அடிப்படைவாத மதவாத போக்குத்தன்மை கிறிஸ்தவத்திலும் இஸ்லாமிலும் உண்டு. இவ்வகையான பிரச்சாரம் இருபக்கத்திலும் உள்ளதை அவதானிக்கலாம். சைபர் வெளி யுத்தத்தை வெற்றிகாணும் பின்னணியில் தளப்

பின்னணியையோ வெகுஜன அபிப்பிராயத்தையோ கணக்கில் கொள்ளாது தொடங்கப்பட்ட போர்தான் தற்போதைய அமெரிக்க - ஈராக் போர். நீண்டகால போர் யுக்தி அமெரிக்காவுக்கு வியட்நாம் சதுப்பு நிலம்போல் பாலைவன மண்ணையும் மாற்றிவிடலாம். பின் லேடனோ, சதாம் குசையினோ அமெரிக்காவால் வளர்க்கப்பட்டவர்களே. தீட்டிய மரத்திலே பதம் பார்க்கப்பட்ட நிலைமை இது. ஊடகங்களின் அதீத பிரச்சாரம் இவர்களது போர் ஆளுமையை வளர்க்க உதவியது. இரசாயன குண்டுகள் பாவிக்கப்படலாம், இது மானிடத்துக்கு எதிரானது என பெரிதும் அலட்டப்படுகிறது. யப்பானில் வீசப்பட்ட அணுகுண்டைவிடவா, அல்லது வியட்நாமில் வீசப்பட்ட நாப்பளம் குண்டுகளைவிடவா, ஆப்கானிஸ்தானில் எறியப்பட்ட காப்பற் குண்டுகளைவிடவா, புட்டின் பாவித்த தடைசெய்யப்பட்ட விச வாயுவைவிடவா சதாம் வீசப்போவது.

### கூலிக்கு மாரடிப்பு

அமெரிக்காவின் கடந்த கால நடவடிக்கைகள் பலத்த எதிர்ப்பையே உருவாக்கியது. தன்னை நீதிமான் என பீற்றியதென்றாலும் அதன் இரண்டகத் தன்மை வெளியரங்கமானது. இதனால் கடந்த செப்டம்பர் அழிவு எதிர்பார்த்த அனுதாபத்தை தரவில்லை. எல்லோரும் அழும்பொழுது கூலிக்கு மாரடித்த கூட்டம்தான். பின் பாரிய கூட்டுப்படையை உருவாக்க அமெரிக்கா தவறிவிட்டது. இஸ்லாமிய பயங்கரவாதத்தை தமது நாட்டுக்குள் கொண்டு வர மற்ற நாடுகள் தயாராக இல்லை.

### அரச பயங்கரவாதம்

இப்போர் அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்டம். கடந்த காலங்களில் தென் கிழக்கு ஆசியாவிலும், பின்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் நடாத்தப்பட்ட போர்கள் மாதிரி தற்போது மசகு எண்ணெய்க்காக வளைகுடாவில் நடாத்தப்படும் அமெரிக்க பயங்கரவாதமே இப்போர். மெடலின் அறிக்கையில் லத்தீன் அமெரிக்க ஆயர் சங்கம் சொன்னதுபோல் இதுவும் அரசபயங்கரவாதமேயாகும். வத்திக்கான் பேச்சாளர் நவரலோ குறிப்பிட்டவாறு போருக்கான நன்நடத்தைப் பத்திரம் வழங்குமிடமல்ல வத்திக்கான். கிளவுஸ் பொ∴ன் கிளவுஸ்விற்ஸ் போரின் அரசியல் அறிவுத்தன்மையை சுட்டிக்காட்டியதோடு அரசியல் தீர்மானத்தின் தேவைபற்றி வலியுறுத்தியுள்ளதை அவதானிக்க வேண்டும். போர் அறிவுரீதியானது. அரசியல் நோக்கம் உள்ளதால் கட்டுப்படுத்தக்கூடியது.

**(கிளவுஸ் பொ∴ன் கிளவுஸ்விற்ஸின் போர் பற்றிய ஆய்வு: லுவேன் பல்கலைக்கழக பேராசிரியர் ஜொகான் வெஸ்ராட்டனின் விரிவுரை குறிப்பிலிருந்து)**

# GLOSSARY – அரும்பதங்கள்

1) Abstract monism - கருத்தியல் ஒருமை கொள்கை
2) Behaviourism - நடத்தை கொள்கை
3) Common Sense - பொதுவாக கருதுவது
4) Determinate - பகுத்துணர்வுக் காட்சி, சவிகற்ப காட்சி
5) Erroneous Knowledge - பிழையுணர்வு
6) External Knowledge - வெளிப்புறத்திலிருந்து கிடைக்கும் அறிவு
7) External World - புறவுலகு
8) Faint images - மங்கலான உருக்கள்
9) False hood - பொய்மை
10) Fruitful activity - பயனான செயல்நிலை
11) Idealists - கருத்துமுதல் கொள்கையினர்
12) Inner Sense Organ - அந்தக்கரணம்
13) Intrinsic quality - இயற்கை பண்புகள்
14) Judgements - தீர்ப்புகள்
15) Judgements of Causal Connection - காரணகாரிய தொடர்பு பற்றியடி தீர்ப்புகள்
16) Judgements of individuality - தனிநிலைத் தீர்ப்புகள்
17) Judgements of measure - அளவுநிலைத் தீர்ப்புகள்
18) Judgements of necessity - தீர்ப்புகளின் இன்றியமையாமை
19) Judgements of quality - பண்பு பற்றிய தீர்ப்புகள்
20) Judgements of quantity - அளவு பற்றிய தீர்ப்புகள்
21) Judgements of Universality - தீர்ப்புகளின் பொதுமை
22) Knower or Perceiver - அறிவான், அறிபவன்
23) Known object or Perceived - அறியப்படுபொருள்
24) Law of excluded middle - நடுப்பொருள் நீக்கநியதி
25) Law of sufficient reason - போதிய காரணகாரிய நியதி
26) Material Consistency - பொருட்பொருத்தம்
27) Matter and Spirit - சடமும் ஆவியும்
28) Mental Construction of reality - உள்பொருள் ஆக்கம்
29) Methodical doubt - முறைமையான ஐயம்
30) Middle term - மத்திமப்பதம்
31) Mind - உள்ளம், மனம்
32) Mind – body dualism - மனம் - உடல் இருமை கொள்கை
33) Miracles - அற்புதங்கள், புதிரான செயல்கள்
34) Monism - ஒருமை கொள்கை
35) Mystical knowledge - மறைபொருள் அறிவு
36) Naïve unreflecting realism - பாமர, சிந்தனையற்ற காட்சிப் பொருள் உண்மை வாதம்
37) Natural - இயற்கையானது, சகஜம்

38) Nature of inference - அனுமானத்தின் இயல்பு
39) Necessity - இன்றியமையாமை
40) Non – Apprehension - அனுபவ பீதி, பொருட்பேறு
41) Objective - புறநிலையுடையது
42) Ordinary perception - லௌகீக காட்சி
43) Other worldly - மறுமை உலகை சார்ந்தது
44) Panorama - விரிந்த காட்சி
45) Particular judgements - சிறப்பு உண்மைகள், தனி உண்மைகள்
46) Philosophy - மெய்ப் பொருளியல்
47) Pragmatic method - பயன்வழி முறை
48) Pragmatist - பயன்வாதி
49) Prejudices - உளச்சார்புகள்
50) Premise major - மேற்கோள் பிரமாணம்

**உணர்வுக்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரும்பை இளக்கினால் அது இளகுகிறது; அத்துடன் ஒளிர்கிறது. இளகும் தன்மை உணர்வுக்கு ஒப்பானது; ஒளிவிடும் தன்மை அறிவுக்கு ஒப்பானது**

~ *சுவாமி சித்பவானந்த*

**அணிமலர் தோட்டம்தான் சமுதாயம் என்றாலும் தனிமலர் ஒவ்வொன்றும் நறுமணம் தரவேண்டும்.**

~ *மு. கருணாநிதி*

**தோல்வி எனக்கு மனச்சோர்வு தருவதில்லை. மாறாக அது என்னை மேலும் ஊக்குவிக்கும்**

~ *மகாத்மா காந்தி*

**பகுத்தறிவு பிறந்ததெல்லாம்
கேள்விகள் கேட்பதனாலே!
உரிமைகள் பெறுவதெல்லாம்
உணர்வுகள் உள்ளதனாலே!
முன்னேற்றம் என்பதெல்லாம்
உழைப்பவர் உழைப்பதனாலே!
கடமைகளைப் புரிவதெல்லாம்
விதலை வேண்டுவதாலே!**

~ *கவிஞர் வாலி*

# பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் கண்ணோக்கில், உளவியல்

— யே. அ. அருள்தாசன்

நாம் ''உளவியல்'' என்று கூறும்போது அனேகமாக விஞ்ஞான புலன் தரவுகளால் நிரூபிக்கப்படக்கூடிய உளவியலையே எமது மனக் கண்முன் கொணர்கிறோம். ஆனால் நாம் இங்கு குறிப்பிடும் உள வியல் உடலுக்கும் ஆன்மாவிற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. கிரேக்க மொழியில் உளவியல் (psychology) என்னும் பதம் ''மனிதன் பற்றி'' அல்லது ''ஆன்மா பற்றி'' என்னும் அர்த்தம் பெறுகிறது.

பிளேற்றோ, அரிஸ்ரோட்டில் ஆகிய இருவரும் சுமார் 2500 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஆரம்ப கால கிரேக்க மெய்யியலாளர்கள்; இன்று உள்ளது போன்று விஞ்ஞான அறிவோ, மெய்யியலறிவோ, இல்லாத காலத்தில் இவர்களின் உளவியல் பற்றிய கருத்து வியக்கத் தக்கதாகும்.

பிளேற்றோவின் கண்ணோக்கில் உடலும், ஆன்மாவும் தற்காலிக மாக ஒன்றிணைந்த இரண்டு பிரிபடக்கூடிய பொருட்களாகும். ஆன்மா ஒன்று, ஆனால் ஆன்மாவில் மூன்று பகுதிகள் காணப்படும், அவையாவன: சித்தாத்மா (rational soul), குரோதான்மா அல்லது இளரத்திரான்மா (irascible soul), இச்சையான்மா (concupiscent soul), இரண்டு உலகங்கள் உள்ளன; அவையாவன: உண்மையுலகு (real world), மாயையுலகு (shadowy world). உடல் மாய உலகைச் சேர்ந்ததாகும். ஆன்மா உண்மையுலகைச் சார்ந்ததாகும். பிளேற் ரோவின் சிறந்த மாணவனான அரிஸ்ரோட்டில் இவ் ஈருலகக் கோட் பாட்டைப் புறக்கணித்துள்ளார். அரிஸ்ரோட்டிலின் கண்ணோக்கில் உடலும், ஆன்மாவும் ஒருங்கிணைந்த இரு பிரிபடாப் பொருட்கள் ஆகும்.

அனைத்துச் சடப்பொருட்களும் (matter and form) பருப் பொருள், உருப்பொருள் ஆகிய இரு பொருட்களால் ஆக்கப்பட்டது போல உடலும், ஆன்மாவும் இணைந்து மானிட உயிரை உண்டாக்கி யுள்ளன. உடல் பருப்பொருளாகவும், ஆன்மா உருப்பொருளாகவும் உள்ளன. மூன்று ஆன்ம உருப்பொருட்கள் காணப்படுகின்றன. அவையாவன; மனிதவுயிர் (rational soul), தாவரவுயிர் (vegetative soul) விலங்குயிர் (sensitive or animal soul) ஆகும்.

# 1. பிளேற்ரோ, அரிஸ்ரோட்டில் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள்

## 1: 1 பிளேற்ரோ

பிளேற்ரோவின் இயற்பெயர் அரிஸ்ரோக்கின். இவர் கிறிஸ்துவுக்கு முன் 427 க்கும் 347 க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. இவர் ஏத்தென்ஸ் நகரிலுள்ள பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவர். இவர் இருபது வயதுடையவராக இருந்தபோது தத்துவஞானி சோக்கிரட்டீசினுடைய சீடரானார். இவரின் தந்தையின் பெயர் அரிஸ்ரோன். இவர் சிறுவனாய் இருந்தபோதே தந்தையை இழந்துவிட்டார். இவரின் பங்கு மெய்யியலின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, விஞ்ஞானத்துறைக்கும் பெரும் பங்காற்றியது.

## 1: 2 அரிஸ்ரோட்டில்

அரிஸ்ரோட்டில் ஒரு சிறந்த மேலைத்தேய ஆரம்பகால விஞ்ஞானியும், தத்துவ ஞானியுமாவார். இவர் சல்சடீஸ் என்னும் இடத்தில் நிக்கோமசுஸ் என்ற வைத்தியருக்கு மகனாக ஏறத்தாழ (கி. மு) 384 ம் ஆண்டு பிறந்தார். இவர் பிளேற்ரோவின் சிறந்த சீடனாக இருந்தார். இவர் பௌதீக அதீதம், அளவையியல், இயற்கை விஞ்ஞானம், ஒழுக்கவியல், அரசியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். இவரே பாரம்பரிய அளவையியலை அறிமுகம் செய்து வைத்தவர். இவர் தமது அளவையியலில் தொகுத்தறி, உய்த்தறி முறைமைகளைப் பயன்படுத்தினார்.

# 2. பிளேற்ரோவின் உளவியல் பற்றிய கண்ணோட்டம்

பிளேற்ரோ இருமை வாதத்தை (dualism) அடிப்படையாகக் கொண்டு தமது மெய்யியலை வளப்படுத்தினார். இவ் இருமை வாதம் இவரின் உளவியல் பற்றிய சிந்தனையிலும் பெருமளவு செல்வாக்கைச் செலுத்துகிறது.

## 2: 1 பிளேற்ரோவின் மெய்ம்மை பற்றிய நோக்கு

பிளேற்ரோ ''மெய்ப்பொருள்'' (real) பற்றியும், ''மெய்ப்பொருள் அல்லாதது'' (unreal) பற்றியும் தமது கவனத்தைச் செலுத்தினார். இவரின் கருத்துப்படி 'மெய்யுலகு' (ideal world), 'நிழலுலகு' (shadowy world) ஆகிய இரண்டு உலகங்கள் உள்ளன.

நாம் வாழும் இந்த உலகு நிழலுலகு அல்லது மாயவுலகு எனக் கருதப்படுகிறது. இது மெய்யுலகின் வெறும் நிழல் ஆகும். மாறாத, சடப்பொருள் அல்லாத, நித்திய, தூய உலகே மெய்யுலகு எனப்படுகிறது. நாம் வாழும் நிழலுலகு தன் பூரணத்துவத்தை மெய்யுலகு வாயிலாகவே பெறுகிறது. ஆகவே நிழலுலகில் வாழும் நாம் அறிவதும் காண்பதும் வெறும் மாயை அல்லது நிழலே ஆகும்; ஏனெனில் நாம் உடலாலும், புலன்களாலும் கட்டுண்ட நிலையிலேயே உள்ளோம்.

## 2: 2 பிளேற்ரோவின் கண்ணோக்கில் உடலுக்கும் ஆன்மாவிற்கும் இடையிலான தொடர்பு.

இருமை வாதத்தை தமது மெய்யியலில் முதன்மைப்படுத்திய பிளேற்ரோவின் கண்ணோக்கில் உடலும், ஆன்மாவும் இரண்டு வெவ்வேறான பொருட்கள் ஆகும். இவை ஒன்றல்ல, மாறாக இவ்விரு பொருட்களும் தற்காலிகமாக இவ்வுலக வாழ்வில் இணைந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக கப்பலையும் அதன் தலைவனையும் குறிப்பிடலாம். ஆன்மா, உடலிலிருந்து முற்றாக மாறுபட்டதொன்றாகும். ஏனெனில் உடல் சடப்பொருளாகவும், ஆன்மா சடப்பொருள் அல்லாத பொருளாகவும் காணப்படுகின்றன.

ஆன்மா உடலிலே தற்காலிகமாகக் குடிகொள்வதன் மூலம் உடலை வாழச்செய்கிறது. ஆன்மா உடலை விட்டகன்றதும் மனிதன் மரணமடைகிறான்; அப்போது அழிவுக்குரிய சடப்பொருளாகிய பிணம் எச்சமாகின்றது. சடப்பொருளாகிய உடலானது புலன்களின் மூலம் மாயவுலகோடு தொடர்பு கொள்ளும் வேளையில், ஆன்மா மெய்யுலகில் தான் பெற்ற எண்ணங்களோடு (ideas) தொடர்பு கொள்கிறது. ஆன்மா உடலினுள் உள் உறைந்த பின் தான் மெய்யுலகிற் பெற்ற எண்ணங்களை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ளத் தொடங்குகிறது. இதனால் பிளேற்ரோ உள்ளியல்பான (innate) வற்றை தனது மெய்யியலில் அனுமதிக்கிறார்.

''ஆன்மாவே மனிதன்; நாங்கள் ஆன்மாக்கள்'' என்கிறார் பிளேற்ரோ. ஆன்மாவின் கருவியே உடலாகும். உடல் ஆன்மாவின் சிறை, ஏனெனில் ஆன்மாவின் இயல்பான இருப்பிடம் அழிவில்லா, மாசில்லா மெய்யுலகாகும். இதனால் ஆன்மா தூயதாகக் கருதப்படுகிறது. ஆன்மாவின் இருப்பிடம் மெய்யுலகாகும். ஆகவே அங்கே அதன் இருப்பு நித்திய மகிழ்வுக்குரிய ஒரு சுவர்க்கமாகிறது.

உடலின் இருப்பிடம் அழிவுக்குரிய மாற்றத்திற்கும் மாசிற்குமுரிய, மாயவுலகாயிருப்பதால் உடல் அழிவுக்குட்படுகிறது.

## 2: 3 ஆன்மாவின் நகர்ச்சி

தன்னியக்கம், ஆன்மாவுக்குரிய அழியாத உடைமைப் பொருளா யிருப்பதால் அது உடலை இயக்குகிறது. உடலின் அசைவிற்கு மூல காரணம் ஆன்மா ஆகும். அது உடலிலிருந்து வெளியேறிய பின் உடல் அசைவற்ற ஜடம் ஆகிறது. இதையே நாம் இறப்பு என் கிறோம்.

## 2: 4 ஆன்மாவின் அழியாத்தன்மை.

ஆன்மா நிலையான அழியாப் பொருள்; இறப்பு ஆன்மாவிற்கு மறுபிறப்பும் உடலுக்கு அழிவும் ஆகின்றது. ஆன்மாவின் இருப்பு இறப்பின் பின்னும் தொடரும். நிழலுலகில் உடலாலும் புலன் களாலும், கட்டுண்டு சிறையுற்றிருக்கும் ஆன்மா இறப்பின் பின் விடுதலையடைகின்றது. இந்நிலையில் ஆன்மா நித்தியத்திற்கும், தூய்மைக்கும், அழியாமைக்கும், மாற்றமின்மைக்கும், நிலைபெறு கிறது. ஆன்மாவைப் பிரிந்த உடல் அழிவுக்குட்படுகிறது.

## 2: 5 மூவகை ஆன்மப்பிரிவுகள்.

பிளேற்ரோவின் கண்ணோக்கில் ஆன்மா ஒன்று, ஆனால் அதன் கண் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன:

1) சித்தான்மா (rational soul)

2) குரோதான்மா (irascible soul)

3) இச்சையான்மா (concupiscent soul)

இவை முறையே: தலை, நெஞ்சு, வயிறு ஆகிய பகுதிகளின் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. சித்தான்மாவைத் தவிர ஏனைய இரண்டும் அழிவுக்குரியன.

தாவரங்களில் இச்சையான்மா மட்டுமே காணப்படும். விலங்கு களில் இச்சையான்மாவோடு, குரோதாத்மாவும் காணப்படும். மனித னிடம் இவை இரண்டோடும் மேலதிகமாக சித்தான்மா காணப்படும். மனிதனில் இவ்மூவகை ஆன்மாக்கள் காணப்படும் போதும் இவற்றில் ஒன்று மட்டுமே, ஆதிக்கமுள்ளதாய்க் காணப்படுவதால் மனிதரிடையே வெவ்வேறான குணவியல்பு படைத்தோரை நாம் காணக்கூடியதாய் உள்ளது. சித்தாத்மா தலைசிறந்த ஆட்சியாளர், மெய்யியலாளரிட மும், குரோதாத்மா படைவீரர் போன்றோரிடமும், இச்சையான்மா,

நாடோடிகள் கலைஞர்கள் போன்றோரிடமும் ஆதிக்கமுள்ளதாய்க் காணப்படும். சித்தாத்மா ஞானத்தையும், குரோதாத்மா வீரத்தையும், தேசபற்றையும் இச்சையான்மா இச்சையையும் வெளிக் காட்டி நிற்கின்றன.

## 3. அரிஸ்ரோட்டிலின் உளவியல்

அரிஸ்ரோட்டிலின் பௌதீக அதீதக்கருப் பொருட்களான பருப் பொருள் (matter), உருப்பொருள் (form), வினைப்பொருள் (act), ஆகும் பொருள் (potency) ஆகிய இவை அரிஸ்ரோட்டலின் உள வியலில் பெரும் செல்வாக்கைச் செலுத்தி நிற்கின்றன. பிளேற் ரோவைப் போலன்றி, அரிஸ்ரோட்டில் உடல், ஆன்மா ஆகிய இரண்டும் பிரிபடா ஒரு பொருள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

### 3: 1 அரிஸ்ரோட்டிலின் பௌதீக அதீத எண்ணக் கருக்களான பருப்பொருளும் உருப்பொருளும்.

அரிஸ்ரோட்டில் பிளேற்ரோவின் ஈருலகக் கோட்பாட்டை ஏற்க மறுத்துள்ளார். புலன்களால் நாம் அறியும் பொருட்களனைத்தும், பருப்பொருள் (matter), உருப்பொருள் (form) ஆகிய இரண்டினதும் இணைபிரியாப்பிணைப்பால் உருவாக்கப்பட்டவை. பருப்பொருளின்றி உருப்பொருளில்லை, உருப்பொருளின்றி பருப்பொருளில்லை. இவை இரண்டும் இவ்வுலகில் நாம் காணும் பொருட்களில் ஒன்றை யொன்று இணைபிரியாமல் தழுவி நிற்கின்றன. ஒரு பதார்த்தத்தின் பருப்பொருள், உருப்பொருள் உறவு நிலையை வைத்து ஆன்மாவிற் கும் உடலுக்கும் இடையிலான உறவை; உடலை பருப்பொருளாகவும், ஆன்மாவை உருப்பொருளாகவும் விளக்கியுள்ளார்.

### 3: 2 உடலுக்கும், ஆன்மாவிற்கும் இடையிலான உறவுநிலை.

பிளேற்ரோவின் உளவியல் கண்ணோக்கு அரிஸ்ரோட்டிலின் உளவியல் கண்ணோக்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. உடலும், ஆன்மாவும் இரண்டு வெவ்வேறான பொருட்களல்ல, மாறாக இவை இரண்டும் ஒன்றானவை. ஆன்மாவே நகர்ச்சிக்குரிய மூலகாரணி. ஆகவே ஆன்மாவின்றி உயிரினம் ஒன்றுமில்லை. ஆன்மாவின் இருப்பின் நிமித்தம் முழு உயிருள்ள உடலமைப்பும் வளர்ச்சியும் அசைவும் பெறுகின்றது. ஆன்மாவே உடலமைப்பின் அசைவிற்கும், இயக்கத் திற்கும் மூலகாரணியும் ஊற்றுமாகும்.

## 3: 3 அரிஸ்ரோட்டிலின் கண்ணோக்கில் ஆன்ம மூவாற்றல்கள்.

பிளேற்றோவின் மூவகை ஆன்மப்பிரிவுகள் (three parts of soul) அரிஸ்ரோட்டிலின் ஆன்ம மூவாற்றல்களிலிருந்து (three types of soul form) வேறுபட்டவை. ஆன்ம மூவாற்றல்கள் காணப்படுகின்றன. அவையாவன:

1) தாவரவுயிர் (the vegetative soul)

2) விலங்குயிர் (the sensitive or animal soul)

3) மனிதவுயிர் (the rational soul)

மேலும் மனிதவுயிர் பின்வருமாறு வகுக்கப்படுகிறது. அவையாவன;

1) செய்நுண்ணறிவு (the active intellect)

2) செயற்பாட்டு நுண்ணறிவு (the passive intellect)

தாவரவுயிர் ஏனைய இரு ஆன்ம ஆற்றல்களின் இருப்பிற்கும். இன்றியமையாதது, இது அனைத்து உயிர்களின் இருப்பிற்கும் இன்றியமையாதது. இனவிருத்தி, சமிபாடு ஆகியவை தாவரவுயிரால் (vegetative soul) ஆற்றப்படும் தொழிற்பாடுகளாகும். தாவரங்களில் இத்தாவரவுயிர் மட்டுமே காணப்படும். ஆன்மாவின் ஒவ்வொரு தொழிற்பாடும் இத்தாவர உயிரிலேயே தங்கியுள்ளது.

ஞாபகசக்தி, கற்பனாசக்தி, புலனுணர்வு போன்ற செயற்பாடுகள், தாவரங்களின் இருப்புக்கு அவசியமற்றவை. தாவரங்கள் நிலத்திலிருந்து சக்தியை நேரடியாக உறிஞ்சுகின்றன. தாவரவுயிர் விலங்குகளிலும், மனிதனிலும், தாவரங்களிலும் காணப்படும் அடிப்படை அலகாகும். விலங்குகளுக்கு தாவரவுயிரோடு மேலதிகமாக விலங்குயிரும் உள்ளது. இதன் இருப்பால் விலங்குகள், இடம்பெயர்வு, புலனுணர்வு, ஞாபகசக்தி, விருப்பு, கற்பனாசக்தி முதலிய தொழிற்பாடுகளை தம்மகத்தே நுகர்ந்தறிகின்றன. மனிதனிடம் தாவரவுயிர், விலங்குயிர் என்பவற்றோடு மனிதவுயிர் (rational soul) மேலதிகமாக உள்ளதால், மனிதன் சிந்தித்து பகுத்தறியும் ஆற்றல் உள்ளவனாக இருக்கிறான். இதனாலேயே அரிஸ்ரோட்டில் ''மனிதன் ஒரு சிந்திக்கும் விலங்கு'' எனக் கூறியுள்ளார்.

## 3: 4 செய்நுண்ணறிவும், செயற்பாட்டு நுண்ணறிவும்.

செயற்பாட்டு நுண்ணறிவு (the passive intellect) புலன்கள் (senses) மூலமாகப் பிரதிப்பொருட்களோடு (images) தொடர்பு கொண்டு செய்நுண்ணறிவு (the active intellect) மூலமாக உருப்

பொருட்களைப் பகுத்துணர்ந்து சரியான எண்ணக் கருக்களைப் பெறுகிறது. இதனாலேயே நாம் ஒவ்வொரு தனிமனிதனையும் கண்டுணர்ந்து தொகுத்தறிந்து 'மனிதர்' என்ற சரியான பொது எண்ணக்கருவைப் பெறுகின்றோம். ஆகவே செய்நுண்ணறிவு இன்றி செயற்பாட்டு - பெறு நுண்ணறிவு (the passive - receptive intellect) எதையுமே அறிய முடியாது. குறிப்பாகச் சொல்லப் போனால் செய் நுண்ணறிவே மனிதனை சிந்தித்து, பகுத்தறியும் ஆற்றல் உள்ளவன் ஆக்குகிறது. செய்நுண்ணறிவு, அழியாத் தன்மை கொண்ட நித்தியமானது. ஆனால் செயற்பாட்டு நுண்ணறிவு மனிதன் இறக்கும் போது அழிவுக்குட்படுகிறது.

அரிஸ்ரோட்டிலின் உளவியலில் உள்ளியல்பானவற்றிற்கு (innate) இடமில்லை ஆனால் பிளேற்ரோ தனது உளவியலில் உள்ளியல்பானவற்றிற்கு (innate) இடமளித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## Bibliography


Copleston, Fredrick, A History of Philosophy vol. I (Greece and Rome), Part II Image books, Garden city, New york, 1962.

Joad, C. E. M., Philosophy, The English Universities. Press Ltd., London, 1994, reprinted 1946.


ஆசாபாசங்களை அழிக்க முடியாது. ஆனால் நல்வழியில் திருப்ப முடியும்.

— பகவத் கீதை —

# சத்தியாக்கிரகம் (Satyagraha)
# காந்திய கண்ணோக்கு

— சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

**முதலாக......**

மனிதம், மனிதாபிமானம், மனித மாண்பு, மனித உரிமை, மனித மதிப்பீடுகள் போன்றன இன்றைய பேசுபடு பதங்கள். இவைகள் பேச்சுக்களோடோ அல்லது எழுத்துக்களோடோ முற்றுப் பெறுபவைகளாக அமையாது, வாழப்பட வேண்டியவைகள். மோகன்லால் காந்தி மனித விழுமியங்களின் படி வாழ்ந்து 'மகாத்மா' வாக உயர்ந்தவர். மானிடத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் நலனை முன்னிறுத்தியது அவரது சர்வோதயம் என்ற சித்தாந்தம்.

மானிடம் மீதான அன்பு ஏழை எளியோர், ஒடுக்கப்பட்டோர், தனிமையில் தவிப்போர் போன்றவர்களுக்கு காட்டும் பணிகளிலேயே தங்கியுள்ளது. உரிமை மறுக்கப்பட்ட தனிநபரினதோ அல்லது சமூகத்தினதோ உரிமைகளையும், விடுதலையையும் நிலைநாட்ட போராட்டம் அவசியமாகின்றது. மனித வரலாற்றிலே பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மகாத்மா காந்தியின் போராட்ட அணுகுமுறை வித்தியாசமானது. காந்தியின் உண்மையை நோக்கிய தேடல், துன்பியல் மானிடத்தை விடிவிற்கு அழைத்துச்செல்ல போராடும் போராட்ட சக்தியாக உருமாற்றம் அடைந்தது. சத்தியாக்கிரகமும் உண்ணாவிரதமும் மகாத்மா காந்தியின் போராட்ட வலுக்களாக அமைந்தன. எம் சமூகத்தையும் உலகையும் சூழ்ந்துள்ள சமய சகிப்புத்தன்மையின்மை, ஊழல், பயங்கர வாதம், சாதிக்கொடுமை, வகுப்புவாதம், வன்முறை போன்றவற்றிற் கெதிரான போராட்ட சக்தியாக காந்தியின் சத்தியாக்கிரகத்தையும் உண்ணாவிரதத்தையும் முன்னெடுக்க ஆலோசித்து அதுபற்றி அலச விளைகிறேன்.

## 1. சத்தியாக்கிரகம் என்றால்......

சத்தியாக்கிரகத்திற்கு, 'உண்மையை பற்றியிருத்தல்' அல்லது 'உண்மையை வலியுறுத்தல்' என்று பொருள் கூறலாம். உண்மை தான் காந்திக்கு கடவுளாக இருந்தது. உண்மையை அதாவது கடவுளை அடைவதற்கான மார்க்கமாக காந்தி அகிம்சை வழியை, அன்பு வழியை தெரிந்தெடுத்தார். உண்மையெனும் தீர்க்கமான

முடிவை அகிம்சை வழியினூடாக அடைய உறுதுணையாக அமைவதே சத்தியாக்கிரகமாகும். இது உண்மையை நோக்கிய ஒரு தணியாத பயணம். ஒருவன் உண்மையை (கடவுளை) முழுமையாக பற்றி அதற்கு —(அவருக்கு) தன்னை அர்ப்பணிக்கும் வாழ்க்கை முறையை சத்தியாக்கிரகத்திற்கான பொதுவான அர்த்தமாக கொள்ளலாம். ''சத்தியாக்கிரகம் என்பது உண்மையையும் அகிம்சையையும் அடித்தளமாகக் கொண்ட வாழ்வின் முழுமையான, நிறைவான வழி'' என்று ஆர். ஆர். திவாகர் என்பவர் சத்தியாக்கிரகத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கிறார்.

ஒரு சத்தியாக்கிரகி சமூகத்திற்காற்றும் சேவையின் அடிப்படையில் ஒரு அமைதியின் ஆளாக இருப்பதோடு முன்னுதாரணமான குடிமகனாகவும் இருக்க அழைக்கப்படுகிறான். அத்துடன் அவர் தனது சுய விருப்புடன் விவேகமான முறையில் சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிபவராக இருக்கிறார். ஏனெனில், அது அவருக்கு தூய கடமையாக புலப்படுகிறது. ஓர் ஆள் எப்போது சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கு இழையும் பிழையாதபடி அமைகின்றாரோ அப்போதுதான் அவர், அக்குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் நல்லவை தீயவை என்றோ நீதியானவை அநீதியானவை என்றோ தீர்ப்பு வழங்கக்கூடிய தகைமையைக் கொண்டிருக்க முடியும். எப்போது ஒரு சத்தியாக்கிரகியின் உணர்வுபூர்வமான மனச்சான்று ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டத்தை அநீதி என்று அடையாளம் காண்கிறதோ அப்போதுதான் அதற்கெதிரான சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏதுநிலைக்கு அவரை இட்டுச் செல்லும். சத்தியாக்கிரகம் தவறான நோக்கத்தை பாதுகாப்பதற்கோ அல்லது தனிப்பட்ட நலனை சுவீகரித்துக் கொள்வதற்கோ முன்னெடுக்கப்படுவது அல்ல. மாறாக இது சமூக நன்மை ஒன்றையே கையாள்கின்றது.

நமது சமூக, பொருளாதார, கலாசார அரசியல் மட்டங்களில் காணப்படும் எல்லா அநீதிகளும் சத்தியாக்கிரக போராட்டத்தால் தீர்க்கப்படக்கூடியதொன்று என்ற எடுகோளை எடுக்கக்கூடாது. ஒருவர் சத்தியாக்கிரக போராட்ட வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கு முன்பாக ஓர் அநீதியின் வலிமைத்தரம், கனாகனம் போன்றவற்றை மதிப்பீடு செய்தல் வேண்டும். சத்தியாக்கிரகம் மிகவும் பலம் வாய்ந்த, உடனடி செயலூக்கம் கொண்டதாக இருப்பதால் இதனை வழித்துணையாக கொள்வதற்கு முன்பாக ஏனைய சகல வழிகளையும் பயன்படுத்த வேண்டும். அதாவது ஒருவர் சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்பாக அநீதியை ஒழிப்

பதற்கான ஏனைய எல்லா வழிமுறைகளிலும் முயற்சித்திருக்க வேண்டும். ஏனைய வழிமுறைகள் என்ற செயற்பாட்டில் பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

அ) அதிகார குழுக்களை ஓயாது, தொடர்ச்சியாக அணுகி பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைத் தேடல்.

ஆ) பொதுமக்களுக்கு அறிவுறுத்தி, மக்கள் மத்தியில் பொது சன அபிப்பிராயத்தை கட்டியெழுப்புதல்,

இ) தனது ஆக்க நலனை, காரண விளக்கத்தை அறிய முயலுவோருக்கு பரபரப்பற்ற முறையில் அமைதியாக கருத்துக்களை வலியுறுத்தல்.

இவ்வாறான சகல வழிகளிலும் முயன்ற பிற்பாடே ஒருவர் சத்தியாக்கிரக போராட்டத்துள் நுழையவேண்டும். மேற்கூறிய எல்லா வழிமுறைகளில் தீர்வை அடைய முடியாத போது ஒருவர் சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படுகிறார். இவ்வாறு சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுக்க ஒருவர் உந்தப்படும் தருணத்தில் அவர் தனது அழைப்பிலே உறுதியாக, கொள்கை நிலை நாட்டத்துடன் இறுதிவரை உண்மையையும் நீதியையும் நிலைநிறுத்த உழைக்க வேண்டியவராகிறார்

## 2. சத்தியாக்கிரகத்தின் நோக்கும் வழிமுறைகளும்:

தனிநபர் அல்லது சமூக சத்தியாக்கிரகத்தின் நோக்கு எதிரியை வெற்றி கொள்வதோ அல்லது தண்டிப்பதோ அல்லது நசுக்குவதோ அல்ல. சத்தியாக்கிரக போராட்டத்தில் பகைவருக்கு தீங்கு விளைவித்தல் அல்லது முட்டுக்கட்டையிடல் போன்ற செயல்களுக்கு இடமே இல்லை. மாறாக, ‘எதிரியை மனந்திருப்புதல்’ என்ற நோக்கினையே சத்தியாக்கிரக போராட்டம் கொண்டிருக்கிறது. ஒரு சத்தியாக்கிரகி தனது போராட்டத்திலே நேர்மையான வார்த்தைப் பிரயோகத்துடன் எதிர்வரும் ஒரு சமரச இணக்கப்பாட்டுச் சந்தர்ப்பத்தை இழக்க மாட்டார். அத்தகைய சமரச இணக்கப்பாடு எதிராளியால் ஏமாற்றப்பட்டாலும் மீண்டும் எதிராளியை நம்புவதற்கு தயாராகி இன்னுமொரு இணக்கப்பாடு காணும் மனநிலையை தாங்கியவராக ஒரு சத்தியாக்கிரகி திகழ்வது அவசியமாகும். ஏனென்றால், ‘‘ஏமாற்றுபவரே கடைசியில் ஏமாறுவார்’’ என்ற அனுபவ உண்மையை சத்தியாக்கிரகி அறிந்தவராக இருப்பார்.

சமரச இணக்கம் காணபதற்கான ஆர்வமும் செயலூக்கமும் சத்தியாக் கிரகத்தின் பகுதிகளாகும் என்றும், ஒரு சத்தியாக்கிரகி மனித இயல் பின் உள்ளார்ந்த நன்மைத்தனத்தையும் எதிரியுடனான ஆன்மீக பண்புத் தொடர்பையும் நம்ப வேண்டும் என்றும் காந்தி கூறுகின் றார். இந்த சமரச இணக்கத்திற்கான செயலூக்கம், அடிப்படையில் சத்தியாக்கிரக போராட்டத்திற்கு தற்காப்பு சிறப்பியல்பை வழங்குவ தோடு பொதுசன அபிப்பிராயத்தின் பக்கத் துணையையும் ஏற் படுத்துகின்றது.

சத்தியாக்கிரக போராட்ட வழிமுறையை இரு வகையாக நோக்கலாம்; ஒன்று நேர் மறையானது, மற்றையது எதிர் மறை யானது. சத்தியாக்கிரக போராட்ட எதிர்மறை வழிமுறை நோக்கின் படி, ஒரு சத்தியாக்கிரகி எல்லாவகை வன்முறைகளையும் தவிர்க்க வேண்டும். ஏனெனில், வன்முறை எதிரியை மனமாற்றுவதற்கு மாறாக அழிப்பதற்கு அல்லது குறைந்த பட்சமாக காயப்படுத்துவ தற்கே பயன்படுத்தப்படுகிறது. சத்தியாக்கிரகி ஒருபோதும் பகுத் தறிவுக்கு மாறான பலாத்காரத்தை தனது செயலிலே பயன்படுத்த லாகாது. பகுத்தறிவுக்கு மாறான பலாத்காரத்தை பிரயோகிப்பின் அவர் எதிரியுடன் ஒத்துழைத்து எதிராளிக்கு துணை புரிபவராகவே கணிக்கப்படுவார். எதிரிக்கு தீங்கு செய்ய நினைப்பதோ அல்லது வெறுப்பான வார்த்தைகளைப் பயன்படுத்துவதோ சத்தியாக்கிரகத் தில் பிளவினை ஏற்படுத்தும். எனவே, சத்தியாக்கிரகி தூசிக்கின்ற அல்லது வசை கூறுகின்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்த லாகாது. சத்தியாக்கிரகத்தைப் பொறுத்தவரை தீய சிந்தனை அல்லது தீய சொற்பிரயோகம் நேரடி வன்முறையைவிட ஆபத்தானதாகக் கொள்ளப்படுகின்றது. ஏனென்றால், நேரடி வன்முறை ஒரு நிலை யில் சடுதியான கோப உணர்வுடன் வெளிப்பட்டு மறு நிலையில் தணிந்து, மாற்றத்திற்குட்படுவதுடன் அச் செயல் மறக்கப்படக் கூடியதொன்றாகவும் இருக்கும்.

'தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு' என்ற வள்ளுவர் வாக்கிற்கொப்ப தீய சொல் மற்றும் தீய சிந்தனை நீண்ட தாக்கத்தையும் பழிவாங்கும் மனநிலையையும் உருவாக்குகின்றன.

சத்தியாக்கிரக போராட்ட நேர்மறை வழிமுறை நோக்கின்படி ஒரு சத்தியாக்கிரகி பிழையை சரியால் அணுக வேண்டும். அதாவது தீமையை நன்மையாலும் கோபத்தை அன்பாலும் பொய் மையை மெய்மையாலும் இம்சையை அகிம்சையாலும் மேற்கொள்ள வேண்டும். ஒரு சத்தியாக்கிரக போராளி எதிரியை தனது குடும்பத்

தின் ஓர் உறுப்பினர் என நினைத்து செயல்படுவார். சத்தியாக்கிரகி மனிதன் என்ற முறையில் எதிராளியுடன் ஆன்மீக பண்புத் தொடர்பினை கொண்டிருப்பதை நம்புவதோடு எதிராளியின் தீய போக்கினை மாற்றத்திற்குட்படுத்த முடியும் என்ற மனநிலையையும் கொண்டு இருப்பார்.

## 3. சத்தியாக்கிரகத்தில் துன்பம்

காந்தியின் சத்தியாக்கிரகத்தில் சுய அர்ப்பணிப்பு அல்லது துன்பம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. காந்தி சத்தியாக்கிரகத்தை துன்பத்தின் நியதி (law of suffering) என்றும் கருதினார். சத்தியாக்கிரகத்தில் துன்பத்தை அழுத்திக் கூறுவதற்கு பின்வரும் காரணங்கள் ஏதுவாக விளங்குகின்றன.

ஒரு சத்தியாக்கிரகி சார்பியல் உண்மையை (relative truth) மட்டுமே அறிய இயலுமானவராகவும், தனிமுதல் அல்லது முழுமையான உண்மையை (absolute truth) ஒருபோதும் அறிய இயலாதவராகவும், இருப்பதால் அவர் எதிரியின் நோக்கு மாறவேண்டுமென்று கருதி கட்டாயமாக வன்முறையை எதிரிமேல் திணிக்க இயலாது. ஏனெனில் சத்தியாக்கிரகிக்கு எது உண்மையாக தோன்றுகிறதோ அதுவே எதிரிக்கு பொய்யாக பிழையாக தோன்றலாம். எனவே சத்தியாக்கிரகி தன்மேல் இம்சையை பிரயோகித்து அதாவது சுய துன்பத்தை அனுபவித்து எதிரியின் மனநிலை மாற்றத்திற்கு வழி செய்யவேண்டும். அதைவிடுத்து வன்முறையை எதிராளிமேல் பிரயோகித்தால் அது தீமையை கண்டிப்பதோடு மட்டுமல்லாமல் தீமை புரிபவருக்கும் ஊறு விளைவித்து விடும். அத்தகைய செயல் அகிம்சை தத்துவத்திற்கு முற்றிலும் முரணானதாக அமைந்துவிடும். ஒரு சத்தியாக்கிரகியின் துன்பம் அல்லது சுய அர்ப்பணிப்பு மேலேயே சத்தியாக்கிரக போராட்டத்தின் முன்னேற்றமும், வெற்றியும் தங்கியுள்ளது. சத்தியாக்கிரகியின் தனித்துவம் துன்புறுவதில் மட்டுமல்ல அந்த துன்பத்தில் இன்பத்தையும் நிறைவையும் காண்பதிலும் அடங்கியுள்ளது.

## 4. சத்தியாக்கிரகத்தில ஒத்துழையாமையும் உண்ணாவிரதமும்

ஒரு பிரச்சனையை வன்முறையற்ற முறையில் தீர்த்து வைப்பதற்கான செயற்பாட்டு உத்திகளை சத்தியாக்கிரகம் கொண்டிருக்கின்றது. அத்தகைய அகிம்சை செயல் முறைகளில் ஒத்துழையாமை பற்றியும் உண்ணாவிரதம் பற்றியும் அலசுவோம்.

## 4 : 1 ஒத்துழையாமை (Non-Cooperation)

சத்தியாக்கிரகத்தில் 'ஒத்துழையாமை' எனும் செயல் அகிம்சை வழியில் உண்மையை நிலைநாட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் அனைத்து எதிர்ப்பாற்றல்களையும் உள்ளடக்குகின்றது. ஒத்துழையாமை என்பது தன்னகத்தே வன்முறையாக அமைந்து விடலாம் எனக் கருதிய காந்தி இதனை 'வன்முறையற்ற ஒத்துழையாமை, (nonviolent non-cooperation) என்று அழைத்தார்.

வன்முறையற்ற ஒத்துழையாமையை முன்னெடுப்பவர் அடக்கு முறையாளரின் விருப்பத்திற்கு இசையாது தீமையை எதிர்ப்பதால் சந்திக்கும் அனைத்து பின் விளைவுகளுக்கும் விருப்போடு முகம் கொடுத்து அதன் வழி ஏற்படும் துன்பத்தை ஏற்றுக்கொள்ள பின் நிற்கமாட்டார். வேலை நிறுத்தம் செய்தல், வெளிநடப்பு செய்தல், ஹர்த்தால் அனுசரித்தல், அமைதி ஊர்வலம் செய்தல், அலுவலகப் பொறுப்பு, பதவிகள் போன்றவற்றினின்று பணிதுறப்பு செய்தல் போன்றன ஒத்துழையாமை நடவடிக்கைகளில் சிலவாகும்.

## 4. 2 உண்ணாவிரதம் ( Fasting )

சத்தியாக்கிரக போராட்ட படைக்கலத்தின் இறுதியான மிகவும் ஆற்றல் வாய்ந்த, தவறிழைக்காத ஆயுதம் உண்ணாவிரதமாகும். உண்ணாவிரதமென்பது ஒரு பழைய பழக்கவழக்கமாக இருந்து வருகின்ற போதும் அரசியலிலே இதனை ஓர் ஆயுதமாக பயன்படுத்திய தனிச் சிறப்பும் மதிப்பும் காந்தியையே சாரும். ஏனைய சத்தியாக்கிரக போராட்ட வழிமுறைகளில் எதிரியாலேயே துன்பமானது ஒரு சத்தியாக்கிரகி மேல் சுமத்தப்படுகின்றது. ஆனால் உண்ணாவிரத போராட்டத்தில் துன்பமானது, சத்தியாக்கிரகியால் சுயமாக வலிந்து ஏற்கப்படுகின்றது. பொதுவாக நோக்கின், மூன்று வகையான உண்ணாவிரதத்தை நாம் காணலாம்.

அ) உடல் தூய்மைக்கான உண்ணாவிரதம்

ஆ) தபசுக்கான உண்ணாவிரதம், அதாவது உயிர் ( spirit ) உடலின் மீதான மேலாதிக்கத்தை அடைவதற்கான பயிற்சி

இ) சத்தியாக்கிரக உண்ணாவிரதம்

சத்தியாக்கிரக போராட்டத்தின் மிகக்கடைசி ஆயுதம் சாகும் வரையிலான உண்ணாவிரத ( fasting unto death ) போராட்டமாகும். தற்கொலையையும் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை

யும் சிலர் ஒன்றாகக் கருதி விமர்சிக்கின்றனர். ஆனால், இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்ட நோக்கினைக் கொண்டிருக்கின்றன. மனிதரிடத்திலே இயற்கையாகக் காணப்படும் வாழ்வதற்கான ஆசையை (natural desire for life) நேரடியாக முடிவுக்கு கொண்டு வரும் செயல் தற்கொலையாகும். மாறாக, சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை பொறுத்தமட்டில், அது எதிரியை மனம் மாற்றி சமூக அநீதியை ஒழிக்கும் உயர்ந்த நோக்குடன் முன்னெடுக் கப்படும் செயலாகும்.

உண்ணாவிரதப் போராட்டம் அநீதியை வெற்றிகரமாக எதிர்த்து தீமை புரிபவரில் மனநிலை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் ஆதாரமாக அமைகிறது. தவறிழைப்போரின் நல்லியல்பை தூண்டி விட்டு அவரது நன்மைத்தனத்தை வெளிவரச் செய்தல் என்னும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் ஒரு மேல் முறையீடு என்று சத்தியாக்கிரக உண்ணாவிரத போராட்டத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கலாம். இத்தகைய உண்ணாவிரதம், ''தூய்மையான நேசம் நிறைந்த ஓர் இதயத்தினுடைய செபத்தின் அதியுயர் வெளிப்பாடு'' என்று காந்தி கூறினார். துன்பமானது இதயத்தினால் நன்கு விளங்கப்படக்கூடிய மொழியாக இருப்பதால் சொற்பொழிவுகளை விட, எழுத்தாக்கங்களை விட உண்ணாவிரதமானது மனித எண் ணத்திலே நிறைவான தாக்கத்தை விளைவிக்கக் கூடியது.

அகிம்சை போராட்டத்தில், உண்ணாவிரதம் மிகவும் கடினமான ஆயுதமாக இருக்கின்ற படியால் தக்க பயிற்சி பெற்ற ஒருவரே இதனை முன்னெடுக்க வேண்டும். சத்தியாக்கிரக உண்ணா நோன் பிருப்பதற்கு முன்பாக ஒருவர் ஆன்மீக சுத்திகரிப்பிற்காக உண்ணா நோன்பிருந்து, தனிப்பட்ட அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும் என்று காந்தி வலியுறுத்தினார். தகுந்த முன் ஆயத்தங்கள் இல்லாது, போதிய சிந்தனா ஆய்வு இல்லாது முன்னெடுக்கப்படும் உண்ணா விரதம் சத்தியாக்கிரக உண்ணாவிரதமாக அமையாது என்றும் குறிப் பிட்டார். உடல் ரீதியான வலிமையை மட்டும் கொண்டிருத்தல் சத்தியாக்கிரக உண்ணா நோன்பிருப்பதற்கான தகைமையாக அமை யாது. மாறாக ஒரு சத்தியாக்கிரகி ஆன்மீக தகுநிலையையும் தெளி வான பார்வையையும் கொண்டிருப்பது சத்தியாக்கிரக உண்ணா விரதத்திற்கு அவசியமாகும். இங்கே குறைவான நம்பிக்கைக்கோ, கோபத்திற்கோ, பொறுமையின்மைக்கோ அல்லது சுயநலத்திற்கோ இடமே இல்லை. கடவுள் மீதான அளவற்ற நம்பிக்கையும் இங்கே அவசியமாகிறது. சத்தியாக்கிரக உண்ணாவிரதத்திலே முடிவில்லா பொறுமை, உறுதியான மனத்துணிவு, செயல் நோக்கில் ஒருமைப் பாடான ஓர்மை, பூரண தெளிவமைதி போன்றன அவசியமானவை யாகும்.

**முடிவாக......**

நாம் வாழ்கின்ற இன்றைய சமுதாயத்தில் தோன்றுகின்ற அரசியல், பொருளாதார, சமுதாய, சமயச் சிக்கல்கள் பெரும் பாலான மக்களை மூச்சுத் திணறச் செய்கின்றன வாழ்க்கையில் நம்பிக்கையிழந்து வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. வன்முறை வன்முறையை வளர்த்து வன்முறைக் கலாசாரம் தலை தூக்குகின்றது. எனவே, இதற்கு மாற்றீடாக சத்தியாக்கிரக தத்துவம் உள்வாங்கப்படுவது காலத்தின் தேவையாக உள்ளது. அநீதியை முடிவுக்கு கொண்டுவர அவசர செயலில் இறங்கி இன்னுமொரு அநீதியின் ஆரம்பமாக அமையாமல் அகிம்சை வழியை ஆரோக்கியமாக முன்னெடுத்து முயல்வது சாலச் சிறந்ததாகும்.

## Bibliography


Mahadev Desai, ed., Gandhi: Autobiography, p. 266.

Jagadisan, ed., Speeches and Writings of Gandhi, Madras: Rochhouse Ltd., 1944 p. 502.

M. K. Gandhi, Hind Swaraj, Ahmedabad: Navajivan Publishing House, 1962, p. 79.

M. K. Gandhi, Correspondence with the Government, Ahmedabad: Navajivan Publishing House, 1959, p. 281.

B R. Nanda, Mahatma Gandhi: A Biography, Delhi: Blackie and Son Limited, 1975, p. 99.


அனுபவிப்பதனால் ஆசை தீர்ந்து விடுவதில்லை

— சங்கர சூத்திரம் —

# சுய உயர்வெய்தல் (Self - transcendence—) ஞானத்துயிலின் அடித்தளம்

**பற்றிக் ஞானப்பிரகாசம் அ. ம. தி.**

ஞானத்துயில் நிலையைப் (mystical state) பலர் பலவழிகளில் அனுபவித்திருக்கிறார்கள். படைப்பு (இயற்கை), மானிட உடல், இலக்கியம், ஓவியம், சிற்பம், இசை, கலை, காதல், யுத்தம், விபத்து, துன்பம், இழப்பு, பிரிவு, நோய், சிறைவாழ்வு, தீயபழக்கம்...... போன்றவற்றிலிருந்து உள்வாங்கப்பட்ட உணர்வுகளை மேலெழச் செய்து (transcend) ஒரு தெய்வீக ஒன்றிப்பை, இரண்டறக் கலந்த நிலையை அதாவது வேறுபாடுகளற்ற நிலையை (absence of multiplicity) அனுபவித்திக்ருகிறார்கள்.

மண்ணுலக வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒன்றிற்காக மானிட உடலும், உள்ளமும் ஆன்மாவும் ஏங்கித் தவிப்பது அதிஉயர் அடிப்படைத் தேவை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அது எமது உடலியல் இயல்பூக்கங்களைப் (instincts) போன்றது. அதன் பின்னணியில் பின்வரும் தேடல்கள் ஆரம்பிக்கின்றன :

| | |
|---|---|
| அழகைப்பற்றிய தேடல் | (quest for beauty) |
| உண்மையைப்பற்றிய தேடல் | (quest for truth) |
| ஒன்றிப்பைப்பற்றிய தேடல் | (quest for communion) |
| இன்பத்தைப்பற்றிய தேடல் | (quest for happiness) |
| மறைபொருள்பற்றிய தேடல் | (quest for mystery) |
| போகத்தைப்பற்றிய தேடல் | (quest for stimulation) |
| நிறைவைப்பற்றிய தேடல் | (quest for perfection) |
| தூய்மையைப்பற்றிய தேடல் | (quest for purity) |
| அர்த்தத்தைப்பற்றிய தேடல் | (quest for meaning) |

இவ்வாறான தேடல்கள் பச்சிளங் குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிக்கின்றன. இவ்வாறான தேடல்கள் உறைந்து கிடக்கும் மானிட வாழ்வில் சில சவால்களும், பிரச்சினைகளும் ஒரு சமூக ரீதியான (social quest) தேடல்களையும் பிறப்பிக்கின்றன. தன்னிலும் பார்க்க மேலான ஒன்றிற்கு அல்லது ஒரு இலட்சியத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கத் தூண்டும் ஒரு சுயமேலெழல் (self-transcendence) மனித மனதில் ஊற்றெடுக்கிறது. அது பின்வரும் தேடல்களாக வடிவெடுக்கக்கூடும்.

அங்கீகாரத்திற்கான தேடல் (quest for identity, recognition)
நீதியைப் பற்றிய தேடல் (quest for justice)
விடுதலையைப்பற்றிய தேடல் (quest for liberation)
மீட்பைப்பற்றிய தேடல் (quest for redemption)
அமைதியைப்பற்றிய தேடல் (quest for peace)

ஒவ்வொரு தேடலும் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப சாதகமான அல்லது பாதகமான எதிர்த்தேடல்களையும் உருவாக்கலாம். உதாரணமாக:

வன்முறைத் தேடல் (quest for violence)
பழிவாங்கல் தேடல் (quest for revenge)
அடக்குமுறைத் தேடல் (quest for oppression)
ஆக்கிரமிப்புத் தேடல் (quest for supremacy)
மேலாதிக்கத் தேடல் (quest for domination)

இத்தேடல்கள் அனைத்தும் வெவ்வேறு வடிவங்களை எடுத்திருப்பினும், மானிட ஆளுமையின் அடித்தளத்திலே (core of one's personality) உறைந்திருக்கும் தெய்வீகத்தின் எதிர்மறையான (negative) அல்லது நேர்மறையான (positive) வெளிப்பாடுகள் என்றே பலர் கருதுகின்றனர். நம் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் கூட ஒரு வகையில் பிழையான வழியில் இட்டுச் செல்லப்பட்ட ஒரு ஆன்ம தேடலே. அது எதிர்மறையான சில வழிகளைக் (means) கையாண்ட போதும் இறுதி இலக்கு (end) ஒரு ஆன்மீக நிறைவே

## அறிவுசார் ஞானத்துயில் (Intellectual Mysticism)

இது ஒரு மதசார்பற்ற அறிவியல் அனுபவமாகும். அடிப்படைக் கோட்பாடுகளை மையமாக வைத்து முடிவெடுக்கப்படும் அனுபவமாகும். அவரவர் தனது சமய, கலாசார, சமூக சூழல்களால் உந்தப்பட்டிருப்பினும் (influence) வரையறுக்கப்பட்டிருப்பினும் (limitations), ஈற்றிலே அவை அனைத்தையும் கடந்து, மேலெழுந்த (self-transcendence) ஒரு நிலையாகும். காலம் (time), இடம் (space), காண்பவன் (subject), காணப்படு பொருள் (object) போன்றவற்றைக் கடந்த நிலையாகும்.

## உணர்வுசார் ஞானத்துயில் (Affective Mysticism)

அனைத்தையும் அரவணைக்கும் ஒரு பேரன்புத் திளைப்பு (universal love)) என்ற கோட்பாட்டை மையமாகக் கொண்டது இவ்வனுபவமாகும். இறைசார் சமயங்கள் (Theistic religions)

இவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். இப் பேரன்பானது கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடையே ஏற்படும் இறைநேயத்தையும், மானிடப் பிறவிகளிடையே ஏற்படும் சகோ தரத்துவ, மனிதநேய அன்பையும் மையாகக் கொண்டது. கடவுளின் பேரன்பு மனுக்குலத்தை நோக்கியும், மானிடப் பிறவிகளின் அன்பு கடவுளை நோக்கியும் பரிமாறப் பட்டுக்கொண்டே இருப்பதாக வருணிக்கின்றன. கடவுளைப் பற்றி அதிகம் பேசாத பௌத்தம் மனிதநேயத்தையும் கடந்து உயிரினங்கள் அனைத்தின் மேலும் இவ்வன்பு பரவலாக்கப்படுவதை வலியுறுத்துகிறது.

## சமயங்களின் தேடல் பாதைகள்

ஞானத்துயில் நிலை என்பது நாம் எம்முள் கொண்டிருக்கும் மெய்ம்மையை (reality transcendence) எமக்கு மீளளிப்பதாகும். இந்த அடிப்படைத் தத்துவத்தை அநேகமாக எல்லாச் சமயங்களும் கோட்பாட்டளவில் ஏற்கின்றன. கடவுள் என்பது ஒரு அறிவியற் கருத்தோ அல்லது ஒரு அறநெறிக் கொள்கையோ அல்ல. படைப்பில் உள்ள வடிவங்களும், மனதில் உள்ள கருத்துக்களும் இரு துருவங்க ளாக அல்லது இரு வடிவங்களாக உள்ளன. ஆனால் இரண்டுக்கும் ஒரு பொதுத் தொடக்கம் அல்லது ஆரம்பம், குறிப்பாக நித்திய ஆரம்பம் எங்கோ உள்ளது என்ற அடிப்படையில்தான் மெய்யியல் உருவாகியது.

நாம் இவ்வுலகை மட்டும் சார்ந்தவர்களல்ல என்றும், ஏதோ ஒன்றிற்குச் சொந்தமானவர்கள் என்றும் ஏதோ ஒரு நிறைவு நிலையை நோக்கிப் பயணிக்கிறோம் என்றும் பல வெளிப் பாடுகள் தோன்றும். இது ஒரு மேம்பட்ட உணர்வு மனத்தின் (super conscio usness) உள்ளாழ அனுபவமாகும். இந்த மெய்மையை ஒரு கனவு நிலையிலிருந்து விழித்தெழும் நிலையாக இந்து மதம் வருணிக் கிறது. கனவு (The dream), கனவு காண்பவன் (The dreamer), விழித்தெழுந்தவன் (The waker) ஆகிய மூன்றும் கடந்த நிலை யாக வருணிக்கப்படுகிறது.

பிறக்கும் போது மானிட ஆன்மா உடலின் ஆட்சிக்கு உட்பட்டிருக் கிறது என்றும் காலப்போக்கில் ஆன்மா உடலை ஆட்சி செய்யும் நிலையை எய்துவதே மானிட வாழ்வின் இலக்கு என்றும் எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. எனினும் சில அடிப்படைத் தத்துவ முரண்பாடுகளும் இல்லாமல் இல்லை.

## இந்துமத அணுகுமுறை

ஜீவாத்மா மானிட உடலில் குடிகொண்டிருக்கிறது. அது இறுதியில் பரமாத்மாவோடு இரண்டறக் கலக்கிறது. மானிடப் பிறவிகளின் வாழ்வு பல்வேறு மேலுறைகளால் (sheaths) ஆக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக இவ்வுறைகள் களையப்பட்டு ஆனந்த நிலை அடைகிறது.

| | | |
|---|---|---|
| mystical | ஆனந்தமயக் கோஷம் | (Bliss or Brahman) |
| ↑ | ↑ | |
| contemplative | | |
| ↑ | | |
| intellectual { | விஞ்ஞானமயக் கோஷம் | (intellect) |
| | ↑ | |
| | மனோமயக் கோஷம் | (will) |
| ↑ | ↑ | |
| sensory { | பிராணமயக் கோஷம் | (awareness) |
| | ↑ | |
| | அன்னமயக் கோஷம் | (physical) |

## கிறிஸ்தவ அணுகுமுறை

கிறிஸ்துவின் வாழ்க்கை - வரலாற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ ஞானத்துயில் மையப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடவுளின் அரியணையில் வீற்றிருத்தல்

↑

mystical — விண்ணேற்படைதல்

↑

contemplative — உயிர்த்தெழுதல்

↑

intellectual — போதனை, சாதனை, பாடுகள், மரணம்

↑

physical — பிறப்பு

↑

இறைநிலை (pre existence)

நரகம், பாதாளம், கீழுலகம் என்றெல்லாம் வருணிக்கப்படுவது மானிட வாழ்வின் இருண்ட, விடுதலையடையாத ஐம்புல நிலைகளையும், உத்தரிப்புத்தலம் என்று கூறப்படுவது இருண்ட, விடுதலையடையாத அறிவியல் நிலைகளையும், மோட்சம் அல்லது விண்ணகம் என்று கூறப்படுவது ஞானத்துயில் நிலையையும் மெய்யியல் ரீதியாக குறிக்கக்கூடும்.

## பௌத்தமத அனுகுமுறை

mystical — nirvana (முக்தி நிலை)

↑

contemplative — middle path (eightfold path)

சமநிலை

↑

intellectual — துன்பத்தின் முடிவு (பற்றறுத்தல்)

↑

sensory — துன்பத்தின் ஆரம்பம்

↑

துன்பம் ( impermanence / நிலையாமை )

## இஸ்லாம் மதத்தின் அனுகுமுறை

(mystical) அல்லாவோடு, மண்ணுலக மாந்தரின் மீட்புக்காகப் பணிசெய்தல்

↑ ↓

(contemplative) அல்லாவிடமிருந்து, உலகை நோக்கி அல்லாவோடு பயணம்

↑ ↓

(intellectual) அல்லாவோடு அல்லாவை அறியப் பயணம்

↑ ↓

(sensory) உலகியல் வாழ்விலிருந்து அல்லாவை நோக்கிப் பயணம்

## துணை நூல்கள்


The teachings of Mystics - Walter T. Stace.

Psychotherapy and the Spiritual Quest - David Benner.

The Golden String - Bede Griffiths


கடந்த இதழிலே ஓர் ஆன்மீக வரம்பிற்குட்பட்ட நிலையில் ஞானத்துயில் எனும் கட்டுரையை வரைந்த ஆசிரியர் பற்றிக் ஞானப்பிரகாசம் இவ்விதழில் ஆன்மீகம் சார்ந்த - சாராத, அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சுய உயர்வெய்தல் எனும் இக்கட்டுரையை அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

## விடுதலை கொடுக்கும் "முறையான சிந்தனை"

எஸ். யூ ஜெகான், அ.ம.தி.

இன்றைய நவீன உலகத்திலே நாகரீகங்களுக்கு அடுத்தபடியாக எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவை பல்வேறு விதமான சித்தாந்த கொள்கைகளும் கோட்பாடுகளுமே. ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குடும்பமும், சமூகமும் ஏன் இனங்களும், நாடுகளும் கூட ஒரு தத்துவக் கொள்கையை பின்பற்றி செயலாற்றிக் கொண்டிருக்கிறான் அல்லது செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. கலாச்சாரங்கள், பண்பாடுகள், மதக்கொள்கைகள் கூட இதனடிப்படையிலேயே பரிணாமமடைந்துள்ளன என்ற கூற்றும் கூட மிகைப்படுத்தப்பட்ட கருத்தாக அமையமாட்டாது. இந்த பல்வேறுபட்ட சித்தாந்த கொள்கைகள் கோட்பாடுகள் ஒவ்வொன்றும் மனிதன் தானே தனக்கென்று தனது நன்மைக்காகவும், பொதுநன்மைக்காகவும் உருவாக்கிகொண்டனவாகும். ஆனால், இதே தத்துவக்கொள்கைகளும், கோட்பாடுகளும் பிறிதொரு மனிதனுக்கோ, அல்லது சமூகத்திற்கோ எப்பொழுதும் நன்மை அளிக்க கூடியதொன்றாக அல்லது அவனுடைய வாழ்விற்கும், சிந்தனைக்கும் அர்த்தம் கொடுப்பதாகவோ அமைந்துவிடுவதில்லை. ஊதாரணமாக கலிலியோ கலிலி, கொப்பனிக்கஸ், டெக்காட் ஆகியோரின் வாழ்வை கூறலாம்.

ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சித்தாந்தமும், சிந்தனைப்போக்கும் உண்டு. (Every person has his own philosophy) இதற்கு காரணம் அவனுக்குள்ளே இருக்கும் சிந்திக்கும் திறன் அல்லது சிந்தனை ஆற்றல் (Capacity for thinking).இந்த சிந்திக்கும் ஆற்றல் தான் அவனை முழுதும் ஆட்கொள்ளும், நெறிப்படுத்தும், உந்தித்தள்ளும் சக்தியாக, பல கொள்கைகள் கோட்பாடுகள், சித்தாந்தங்களை பிரசவிக்கும் கருவறையாக மனிதனுக்குள்ளேயே இருந்து செயற்படுகின்றது. உதாரணமாக கார்ள் மாக்ஸின் மாக்ஸிசம், கௌதம சித்தாத்தனின் புத்த தர்மம் ஆகியவற்றைக் கூறலாம்.

"நான் எதை சிந்திக்கின்றேனோ அது தான் என்னுடைய உலகம்" என்கிறார் செனொபானஸ். "நான் சிந்திக்கிறேன் ஆகவே நான் நானாக இருக்கிறேன்" என்கிறார் அறிஞர் டெக்காட். ("Cogito ergo sum".) ஆனால் இத்தகைய கருத்துக்கள் சரியாக ஆதாரப்படுத்தப்படாததன் காரணத்தினால் அவை பல சந்தர்ப்பங்களிலே தவறானவையாக, பக்கச்சார்பானவையாக, மிதவாத கருத்துக்களாக (false, subjective, extreme) கணிக்கப்பட்டு பலத்த கண்டனங்களுக்கும் எதிர்மறையான விமர்சனங்களுக்கும் ஆளாகியுள்ளன. உதாரணமாக புத்தபெருமான் கார்ள் மாக்ஸ், கலிலியோ கலிலி, கொப்பணிக்கஸ், டெக்காட், மாட்டீன் லூத்தர் ஆகியோரின் வாழ்வைக் கூறலாம்.

இந்த முழு பிரபஞ்சத்திலும் எத்தனையோ விதமான நிகழ்வுகள், இயக்கங்கள், சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. ஆனால், அவற்றைப் பற்றி மனிதன் சிந்திக்கும் வரையும், அந்த நிகழ்வுகள் அவனை எந்த விதத்திலும் பாதிக்கப்போவதில்லை. ஒரு பைத்தியக்காரனுக்கு வளைகுடாவில் நடக்கும் யுத்தமும், அதன் விளைவுகளும் எந்த சலனத்தையும் உண்டுபண்ணப்போவதில்லை. ஒரு சுயநினைவு இழந்த மனிதனுக்கு அறிஞர் ஐன்ஸ்ரைனின் அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புக்களும், சார்புக்கோட்பாடுகளும் எந்த அர்த்தத்தையும் கொடுக்கப்போவதில்லை. அறிவு வளர்ச்சி குன்றிய மனிதனுக்கு இறைவனுடைய இருப்பு பற்றிய வாதப்பிரதி வாதங்களெல்லாம் வெறும் வெற்று ஓசைகளே.

எனவே இந்த சிந்திக்கும் ஆற்றல்தான் மனிதனுடைய அனைத்து சித்தாந்த கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் மூலகாரணமாக அமைகிறது. ஹிட்லரின் சிந்தனைப்போக்கு பல லட்சம் உயிர்களை காவு கொண்டது. அன்னை திரேசாவின் சிந்தனைப் போக்கு பல லட்சம் உயிர்களை வாழ வைத்தது. மனிதனுடைய ஆசைகள், தேவைகள் கூட அவனுடைய சிந்தனைக்கேற்பவே தோற்றம்பெற்று, நிவர்த்திசெய்யப்பட்டு மறைந்து போகின்றன. பாராளும் அரசனின் சிந்தனைக்கு தேவையில்லையென்று எதுவுமேயில்லை. அனைத்தையும் துறந்துவிட்ட ஆண்டிக்கு தேவையாயிருப்பது ஒன்றுமேயில்லை.

அதே நேரத்தில் மனிதனுடைய சிந்திக்கும் சக்தியில், ஆற்றலில், அவனுடைய தேவைகளும் ஆசைகளும் கூட செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக அமைந்து விடுகின்றன. இந்த நிலை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையாக பலராலும் கணிக்கப்படுகின்றது. எது என்னிடம் இல்லையோ அதனைப் பற்றியே எனது சிந்தனை உலகம் அமைந்துவிடுவது தான் இந்த துர்ப்பாக்கிய நிலை (I think what I am deprived of). காலணி இல்லாதவனுக்கு காலணி பற்றிய சிந்தனை. காலே இல்லாத மனிதனுக்கு தன்னுடைய காலைப் பற்றிய சிந்தனை. இவ்வாறான வேறுபட்ட, பல விதமான சிந்தனையின் தன்மைகளுக்கு ஏற்ப அவற்றை பல்வேறு நிலைகளாக வகைப்படுத்தலாம்.

1. நான் சிந்திக்கின்றேன் என்பதையே உணரமுடியாத நிலை. (குழந்தைகள், சிறுவர்கள், மனநிலை பாதிப்படைந்தோர், மற்றும் சாதாரண வளர்ந்தவர்களும், மேலோட்டமான, உள்ளுணர்வு அற்ற வாழ்க்கை முறையை கொண்டவர்களும் இதில் அடங்குவர்.)
2. நான் சிந்திக்கக்கூடிய மனிதன், சிந்தித்துசெயல்படும் மனிதன் என உணரும் நிலை / சிந்தித்து செயல்படும் மனிதன் இல்லையென்று சுய அறிவுடன் சிந்திக்கும் நிலை.
3. எனது சிந்தனைகள் / நினைவுகள் மாத்திரமே இந்த உலகம் என்ற ரீதியான சிந்தனை.

4. இந்த உலகத்தில் உள்ள பிரச்சினைகள் எல்லாம் எனது பிரச்சினை என சிந்திக்கும் நிலை.
5. சுயநலப் போக்கு கொண்ட சிந்தனை நிலை.
6. பிறர்நலப் போக்கு கொண்ட சிந்தனை நிலை.
7. என்னைப் பற்றி, என்னுடைய உடல், உள, ஆன்மீக இயக்கங்கள் செயல்பாடுகள், இருப்பு பற்றிய சிந்தனை நிலை. (இவற்றைப் பற்றி துல்லியமாகவும், ஆழ்ந்த அறிவோடும் சிந்தித்தல்.)
8. உலகின் இருப்பு. அதன் போக்கு, இயக்கம் போன்ற ஒவ்வொன்றையும் துல்லியமாக சிந்திக்கும் நிலை.
9. அவையவற்றை அவையவையாக பார்த்து சிந்திக்கும் நிலை.
10. பரம்பொருளை, அதன் இருப்பைப்பற்றிய சிந்தனை நிலை.
11. எனக்குள் எழும் சிந்தனைகளைப் பற்றி துல்லியமாக சிந்திக்கும் ஞான நிலை.
12. சிந்தனையைக் கொண்டு சிந்தனையையே துறந்து விட்ட சமாதிநிலை.

இவ்வாறான சிந்தனை நிலைகள் ஒரு மனிதனுக்குள்ளே அவனுடைய வெவ்வேறான அறிவு ஆன்மீக முதிர்ச்சிக்கேற்ப வெவ்வேறு நிலைகளில் வடிவங்களில் காணப்படலாம்.

பௌத்த தர்மத்தின் அடிப்படையில் "முறையான சிந்தனை" (right mindfulness – Samma- sati)[1] என்ற கோட்பாடு மிக முக்கியமான ஞானத்தை அடையும் வழியாக அல்லது மார்க்கமாக போதிக்கப்படுகின்றது. இந்த கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு மனிதன் தனது பூரண சுய அறிவை அல்லது ஞானத்தை அல்லது முக்தியை[2] அடைய வேண்டுமானால் அவன் தன்னையும், தனக்குள் நடைபெறும் செயற்பாடுகளையும், பிரபஞ்சத்தையும் அதன் அனைத்து இயக்க செயற்பாடுகளையும், துல்லியமாகவும், பாரபட்சமற்ற தன்மையுடனும், தனித்தும் அவையவற்றை அவையவையாக (Objectively) பார்க்கும் மனநிலையுடனும் நோக்கவேண்டும். உதாரணமாக ஒரு மனிதனை ஆராயும் போது அவனை அவனாக நோக்க வேண்டும். (அவனுடைய இனம், மொழி, சாதி, சமயம் என்ற தன்மைகளோடு நோக்குதல் தவறானதாகும்.)

இதனைத் தான் பகவத்கீதை "யுங் ஜன்னேவம் ஸதாத்மானம் யோகீ நியதமானஸ: 1 சாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி" என்று கூறுகிறது. இந்த முறையான தெளிவான கூர்ந்த சிந்தனை முதலில் ஒரு மனிதனுக்குள்ளேயே இருந்து பிறக்க வேண்டும். ஒருவன் தன்னைத் தானே சரி வர புரிந்து கொள்ளாதவிடத்து, எவ்வாறு இந்த பரந்த விரிந்த உலகத்தினை அறிந்து கொள்ள முடியும். எனவே, என்னைப் பற்றி நான் முறையாக சிந்திக்கும் போது பின்பற்ற வேண்டியவை:

(1) என்னுடைய வெளியரங்க செய்கைகளையும் அதன் நோக்கங்களையும் பற்றிய துல்லியமான சிந்தனை (Activities of the body).

(2) என்னுடைய உணர்வுகள். அவற்றின் தோற்றம், வளர்ச்சி, மறைவு பற்றிய கூர்ந்த சிந்தனை (Sensations or feelings).

(3) என்னுடைய மனதின் எண்ண ஓட்டம், அதன் இருப்பு, அசைவு பற்றிய சிந்தனை (Activities of the mind).

(4) என்னுடைய கொள்கைகள், வேதாந்தங்கள், தத்துவக் கருத்துக்கள் (Ideas & Conceptions)

இத்தகைய முறையான சிந்தனை மனிதனை பலவேறு விதமான உடல், உள உணர்ச்சி ரீதியான அடிமைத்தனங்களிலிருந்து மீட்க வல்லது. உதாரணமாக கோப உணர்வு உண்டாகும் போது, நான் கேட்க வேண்டிய கேள்விகள்: இந்த கோப உணர்வு எங்கிருந்து வருகிறது? நான் கோபம் கொள்வதன் காரணம் என்ன? இந்த உணர்வை எவ்வாறு நான் கையாள வேண்டும்?

இத்தகைய முறையான சிந்தனை ஊடாக (right mindfulness) மனிதன் தன்னுடைய சிந்தனைப்போக்கிலே சமாதி நிலையை அடையமுடியும். எல்லாவிதமான சிந்தனையின் தன்மைகளையும் ஆராய்ந்து அவற்றின் ஸ்திரத்தன்மையை, உறுதித்தன்மையை உணரும் போது சிந்தனையால் சிந்தனையே இன்றி இருக்கும் ஞான நிலை தோன்றும். இது தான் சமாதி நிலை அல்லது முக்தி நிலை என்பதாகும். இந்த நிலையை அடையும் மனிதன் அனைத்திலும் ஒற்றுமையையும், ஒருமைத்தன்மையையும், நிறைவையும் கண்டடைவான். செயலில் செயலின்மையையும், செயலின்மையில் செயலையும் காண்பான். இந்து மதத்திலே இதனைத்தான் "நிஷ்காமிய கருமம்" [3] என்றும் பௌத்த தர்மத்திலே "உப்பேக்கா" அல்லது "உப்பேக்ஷா"[4] என்றும் அழைக்கின்றார்கள். பகவத்கீதையில் "கர்மண்யேவாரி காரஸ்தே மா பலேஷ" கதாசன மா கர்மபலஹேதுர்பூர்மாதே ஸங்கோSஸ்த்வகாமணி" என்று சொல்லப்படுவதன் பொருள் யாதெனில் "கருமம் நடைபெறவேண்டும், கரும பலனில் ஆசை வைக்கலாகாது." (Action without desire.) படகு நீரில் இருக்கலாம். ஆனால் நீர் படகுக்குள் நுழையலாகாது. அவ்வாறே மனிதன் உலகில் வாழலாம். ஆனால் உலக ஆசாபாசங்கள் அவன் உள்ளத்தில் புகுந்துவிடல் ஆகாது. இவ்வாறான நிலையை அடையப்பெறும் மனிதன் சிந்தனையில் தெளிவுற்றவனாய் பற்றுக்களையெல்லாம் துறந்துவிட்டவனாய், இந்த முழு பிரபஞ்சத்தையுமே தனக்குள்ளும், தன்னை இந்த முழு பிரபஞ்சத்திலும் காணக்கூடிய சக்தியை பெறுவான். இதனால் இனி அவன் ஆசைப்படுவதற்கு எதுவுமேயில்லை. அவனுக்கு தேவையாயிருப்பதும் ஒன்றுமில்லை.

எப்போது மனிதன் தன்னைப்பற்றி இந்தவிதமான சுயஅறிவிற்கு வருகின்றானோ, அப்பொழுது தான் அவன் மற்றவர்களைப்பற்றியும், இந்த முழு உலகத்தையும் பற்றிய அறிவை சரிவர அடையமுடியும். இதுதான் மனிதனுடைய வாழ்வின் அறிவுத்தேடலுக்கு சிறந்த அணுகுமுறையாகவும் ஆன்மீக வாழ்க்கைக்கு அடி அத்திவாரமாகவும் மாறவேண்டும். இந்த முறையான சிந்தனையினூடாக மனிதன் தன்னிலே இறைவனையும், அதே இறைவனை பிற உயிர்களிடத்திலும் ஏன் இந்த முழு பிரபஞ்சத்திலேயும் காண்கின்றான். இந்த முறையான சிந்தனை மனிதனை தன் வாழ்வின் உண்மையான இருப்பை நோக்கி நகர்த்திச்செல்கின்றது. எனவே அறிவும்-ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. மாறாக மனிதனுக்குள்ளேயே இருக்கும் மனிதனின் சிந்தனா சக்தி முறையாக நெறிப்படுத்தி, வழிப்படுத்தபடும் பொழுது,[5] ஒரு பறவை எவ்வாறு தனது "பறவை" என்ற பெயருக்குரிய நிறைவை அடைகின்றதோ அவ்வாறே மனிதனும் தனது அறிவையும், ஆன்மீகத்தையும் (விசுவாசம், நம்பிக்கை, இறைத்தன்மை, பரம்பொருள் பக்தி) கொண்டு தனது மனித வாழ்வின் நிறைவான உண்மையை, முக்தியை, நிர்வாணத்தை, பிரம்மத்தை, கடவுளை அடைய முடியும்.

அடிக்குறிப்புக்கள்:

1. Buddhism in the light of Modern Scientific Ideas (Bangkok, Thailand) Suriyabongs, Dr. Luang.
2. Bhagavd Geetha 06:15
3. Bhagavad Geetha 02:47
4. "உப்பேக்கா", Equanimity
5. Fides et Ratio

**Bibliography -துணை நின்ற நூல்கள்**


1. Jones, W.T. – "Thomas": Metaphysics, edi, W.T. Jones, "The Medieval Mind", New York, 1980.
2. Lagrange, G.R. – "Reality", edi, G.R. Lagrange, "A synthesis of Thomastic Thought", London, 1958.
3. Dr. Luang,"Buddhism in the light of modern Scientific Ideas. (Thailand)
4. Bhagavat Greetha, "பகவத்கீதை"

## Synopsis:

### 1. The present war of America on Iraq

**- S. F. Kirupananthan**

A critical analysis from the point of Philosophy of war of Claus von Clausewiz

The Media imperialism dominates the information flow to justify its stand on this present war of America on Iraq. The people are experiencing array in the jungle of information to make our ethical decision. At this situation we are proposing the analysis of war from the philosophy of war by Claus von Clausewiz who had a wider influence in cold war era and also in the military planning. He is considered as a master strategist through his philosophy of war and he puts forward the rational aspect of war. Every war is very much depended on the political decision of the nation as a moral person. This view of rational dimension of war is different from the fatalistic view of war of many pacifists.

### 2. Psychology according to Plato and Aristotle

**- J. A. Arulthasan**

Here the word "Psychology" does not denote the empirical Psychology; in Greek the word refers to a study "on man" or "on soul". Here Psychology unfolds about the relationship between the body and the soul. We shall see, what Plato and Aristotle say about the body and the soul.

Plato was the disciple of Socrates; Plato bases his Philosophy on Dualism. He had an idea of the Real world and the unreal world. The real world is the world of Perfection and the unreal world is the shadow of the Perfect world. The soul belongs to the Real world and the body belongs to the unreal world. For Plato the soul is imprisoned in the body, so they are two different substances contingently united in this world, like a ship and its captain. The soul is superior to the body and rules over the body.

The soul is one but it has three parts. They are rational soul, irascible soul and concupiscent soul which are located in the head, the

chest and the abdomen respectively. Only the rational soul is immortal. Among these three parts of the soul, one part of the soul may dominate. Therefore different characters could be identified in men. The Rational soul would be dominant in rational ideal rulers and Philosophers. Irascible soul would be dominant in the soldier type of people. Concupiscent soul would be dominant in the workers, artisan type of people and gypsies.

Aristotle was a faithful disciple of Plato. He is the inventor of formal Logic. He worked in the fields of metaphysics, Logic, Natural Science, Ethics, Political Science etc. Aristotle objected to Plato's notion of the Real world and the three parts of the soul. For Aristotle, the animated body is a single substance, the body and the soul are bound together in an inseparable union. For Aristotle there are three types of soul form, They are :

(1) The nutritive or Vegetative soul
(2) The sensitive or animal soul and
(3) The rational soul.

The rational soul has also a distinction soul.

(I) The active intellect and
(II) The passive intellect.

The vegetative soul is very essential for any living being. It can exist by itself. Plants have only this type of soul form. Reproduction and assimilation are the activities provided by the vegetative soul. Animals have vegetative soul and animal soul. Due to the existence of the animal soul animals are endowed with the power of movement, perception, memory and desire etc. Human beings have vegetative soul and animal soul and additionally crowned with the rational soul which makes man a rational animal with intellect and will.

## 3. Satyagraha: A Gandhian Perspective

**- S. Douglas Milton Logu**

Gandhi was a relentless seeker of Truth which became a truth force for his struggles towards liberating the suffering humanity.

Satyagraha means holding on to truth or insistence on truth. Since the only way to attain Truth is non-violence or love, Satyagraha is the relentless pursuit of truthful ends by nonviolent means. Satyagraha can be undertaken only for Social good and not for personal gain or to

defend a wrong cause. Since Satyagraha is one of the most powerful methods of direct action, a Satyagrahi exhausts all other means before he resorts to Satyagraha.

The aim of Satyagraha is not to crush, defeat or punish the opponent. But it is meant only to convert him. Satyagrahi should believe in the inherent goodness of human nature and also in the spiritual kinship with the adversary. A Satyagrahi should not use abusive or insulting language. He will always try to overcome evil by good, anger by love, untruth by Truth and himsa by Ahimsa.

In Gandhian Satyagraha self-sacrifice or suffering has an important place. Gandhi even called satyagraha the law of suffering. If violence is used against the adversary, it hurts not only the evil, but also the evil-doer. And this is against the principle of Ahimsa. A Satyagrahi should not only suffer but even find joy in suffering.

Non-cooperation includes all nonviolent resistance for the vindication of truth. Non-cooperation may include strikes, walk-outs, hartal and resignations from officers and titles. The ultimate, most potent and infallible weapon in the armoury of a Satyagrahi is fasting. In the other forms of Satyagraha, suffering is inflicted on the Satyagrahi by the opponent but in fasting suffering is self-imposed. Fasting unto death is the final weapon in the hands of a Satyagrahi. It is not a suicide. Suicide directly puts an end to the natural desire for life. Fasting on the contrary, is undertaken to convert the adversary and thus remedy an injustice in society. It is the highter expression of the prayer of a pure loving heart. The Satyagrahi must possess spiritual fitness and a clear vision. In it there can be no room for lack of faith, anger, impatience, or selfishness.Infinite patience, firm resolve, single mindedness of purpose and perfect calm must be a necessary there.

## 4. Self-transcendence – the base of mystical experience

**-Patrick Gnanapragasam, OMI**

Every human being is a religious creature in all its aspects. The quest for God or the Absolute takes different, varied and unimaginable paths. This quest is mainly divided into two different aspects namely the intellectual and the affective mystical experiences. Every quest has a favourable or unfavourable outcome.

A mystic is one who absorbs an experience and associates it with a self-transcending hunger for what lies beyond his grasp.

Both the forms which exist in nature and the ideas which exist in the human mind have their source in the mind of God.

The process of the quest for God has taken different aspects into consideration. But all of them could be included in the category namely sensory, intellectual, contemplative and mystical. Under these four steps all the religious have tried to introduce the experience of God in their own religio-psycho-social-cultural background.

## 5. The Right - Mindfulness That Gives Freedom

**- S. U. Jehan, OMI**

Every person has his or her own philosophy of looking at things. There are various theories, philosophies and doctrines that resulted from the thinking mind of man. It is his thinking capacity or reasoning out ability that always make a person question and reflect. This thinking capacity of man can give birth to both good and evil effects, subjective and objective norms, spiritual and material values, practical and doctrinal ideas and conceptions.

A person cannot be affected by an idea or a concept unless and until he thinks or reflects about it. That's why Rene Descartes says, "I think therefore I am". If I loose my subjective consciuousness to think, nothing in this world would become meaningful to me. There can be various stages of reason that could exist in a human mind. Among all these stages, most noble and liberative way of thinking is the "right mindfulness". This "right mind fullness is treated in Buddhism as one of the eightfold paths that lead to liberation. (Mukti or Moksha). This is the only way for the purification of beings, for the overcoming of sorrow and suffering, for reaching the right path for the attainment of "Nibbana" (Nirvana) or liberation.

There are four foundations of right mindfulness:

1) Mindfulness over the activities of the body.
2) Mindfulness over the feelings and sensations. (their origin, development and cessation)
3) Mindfulness over the mental activities.
4) Mindfulness over the mental formation of conceptions and ideas.

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

| | |
|---|---|
| தொகுப்பாசிரியர்: | யோ. போல் றொகான், L. Ph. (Rome) |
| துணையாசிரியர்: | சூ. டக்ளஸ் மில்ரன் லோகு, B. A.(Phil.) (Madurai) |
| விநியோகம்: | வெ. எமில் எழில்ராஜ், (இளங்கலை மாணவன்)<br>ஜெ. அ. ஜெயரஞ்சன், (இளங்கலை மாணவன்) |
| ஆலோசகர்: | லூயிஸ் பொன்னையா, அ.ம.தி. L. Ph. (Rome) |
| வெளியீடு, விநியோகம்: | மெய்யியல்துறை<br>சவேரியார் குருத்துவக் கல்லூரி<br>கொழும்புத்துறை<br>யாழ்ப்பாணம். |

# MEI - IYAL NOKKU

(Bi - annual)

| | |
|---|---|
| Editor : | J. Paul Rohan, L. Ph. (Rome) |
| Sub - Editor: | S. Douglas Milton Logu, B. A. (Phil.) (Madurai) |
| Distributors: | V. Emil Elilraj, (Under graduate)<br>J. A. Jeyaranjan, (Under graduate) |
| Consultant: | Louis Ponniah, O. M. I., L. Ph. (Rome) |
| Publishers, Distributors: | Fuculty of Philosophy<br>Xavier's Seminary<br>Columbuthurai, Jaffna. |


**இலச்சினை விளக்கம்:**

எல்லையில்லா அகிலத்தில்,
எல்லையுள்ள உலகினில்,
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்

**Our Logo:**

Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.

**அட்டையில் உள்ள 'உலகின் தலைவிதி!?'**

– பொதுவானதொரு சிந்தனைக்கு உருவும், வரியும் கொடுத்தவர்

– நீ. லெஸ்லி அன்ரனி

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்தும் வெளிவர உள்ளது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 40.

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

-சோக்கிரட்டீஸ்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

மெய்யியல் நோக்கு
சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம்.